பக்கங்கள் 8

ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 புரட்டாதி 13 ஜூல்-கஃ 18 இதழ் 230
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 29 - 9 - 80

SRI LANKA - JAFFNA
RECEIVED
PERIODICALS DIVISION

## ஐ. நா.வில் பிரதமர் இன்று உரையாற்றுவார்

(நியூயோர்க்)

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் இன்று காலை உரை நிகழ்த்துவார்.

பிரதமர் தமது உரையை சிங்களத்தில் நிகழ்த்துவார். ஆனாலும் பிரதமரின் உரை பிரெஞ்சு, ஜெர்மன், சீன, ஸ்பானிய, ஆங்கிலம் ஆகிய ஐந்து மொழிகளிலும் ஏககாலத்தில் மொழிபெயர்க்கப்படும்.

இலங்கைப் பிரதம மந்திரியொருவர் ஐக்கியநாடுகள் பொதுச்சபையில் சிங்களத்தில் உரையாற்றுவது இதுவே முதல்தடவையாகும். [செ]

★ ஈரான் - ஈராக்கில் தொடர்ந்து கடும் சண்டை!

# போர் நீடிக்கும் என்கிறது ஈரான்!

# சமரச முயற்சிகள் தோல்வி?

## ஈராக்கின் 13 விமானங்களை நேற்று சுட்டு வீழ்த்தினர்

லண்டன், செப். 28

**ஈரான் - ஈராக் எல்லைச்சண்டை, பிரகடனப்படுத்தப்படாத யுத்தமாக உருமாறி; தரையிலும், கடலிலும் முழுஅளவில் போர்ஆரம்பமாகி இன்றுடன் ஏழாவது நாளான போதிலும், யுத்தம் தணிவதற்குப் பதிலாக இருநாடுகளிலும் தொடர்ந்து கடும்சண்டை நடைபெற்று வருவதாகவே செய்திகள் தெரிவிக்கின்றன!**

**யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஈராக் கடும் நிபந்தனை விதித்திருக்கும் அதேநேரத்தில்; ஈரான் சமரச முயற்சிகளை முற்றாக நிராகரித்துவிட்டது!**

''யுத்தம் எத்தனை நாட்களுக்குத் தொடரும் என்பதைக் கூறமுடியாது. முழு வெற்றி கிடைக்கும்வரை ஈரான் தொடர்ந்து போர் புரியும். சமரச முயற்சிகளில் ஈரானுக்கு நம்பிக்கை இல்லை'' என்று ஈரானிய ஜனாதிபதி பாணி சத்தர் நேற்று பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஸியாவுல் ஹக்கிடம் தெரிவித்துள்ளார்.

யுத்தமுனைகளிலிருந்து இன்று வெளியான செய்திகளின்படி, ஈரானில் கடுமையான தாக்குதல்கள் நடைபெற்றபோதிலும் ஈராக்கில் இன்று விமானத்தாக்குதல்கள் நடைபெற்றதாக தகவல்கள் கிடைக்கவில்லை என்று தெரியவருகிறது.

ஈரானில் இன்று அதிகாலை விமானத்தாக்குதல்கள் நடத்திய ஈராக் விமானங்களில் பதின்மூன்று ஈராக் மிக்யுத்த விமானங்களை ஈரான் படைகள் சுட்டு வீழ்த்தின என்று இன்று தெஹ்ரான் வானொலி அறிவித்தது. இதனை பாக்தாத் வானொலி மறுக்கவில்லை.

### ஈரான்குற்றச்சாட்டு

ஈரானிய இராணுவத்தளபதி நேற்று வானொலியில் விடுத்த செய்தியில் ஈராக்குக்கு சில அரபு நாடுகள் உதவி செய்கின்றன என்றும் சில அரபு நாடுகளின் படைகள் ஈராக் படைகளுடன் சேர்ந்துள்ளன என்றும் குற்றம் சாட்டினர். ஆனாலும் இச்செய்தியை ஈராக் பாதுகாப்பு அமைச்சு உடனடியாக மறுத்தது.

தெஹ்ரானுக்கு விஜயம் செய்துள்ள யாஸிர் அரபாத், பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியாவுல் ஹக் ஆகிய இருவரும் ஈரானியத் தலைவர்களைச் சந்தித்து சமரச முயற்சிகள் மேற்கொண்டனர், ஆனாலும், இம்முயற்சிகள் நேற்றுவரை பலனளிக்கவில்லை என்று செய்திகள் தெரிவித்தன.

''சமரச முயற்சிகளில் எமக்கு நம்பிக்கை கிடையாது. போரை ஆரம்பித்த ஈராக்தான் முதலில் யுத்தத்தை நிறுத்தி வாபஸாக வேண்டும். அதுவரை யுத்தம் நீடிக்கும். யுத்தம் எப்பொழுது முடியுமென்று கூறமுடியாது'' என்று ஈரான் ஜனாதிபதி பானி சத்தர் பாகிஸ்தான் ஜனாதிபதியிடம் தெரிவித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## கல்வி அமைச்சர் உயர்வகுப்புமாணவரை இன்று காலை சந்திப்பார்

(யாழ்ப்பாணம்)

மூன்றுநாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ் செய்யும் கல்வி அமைச்சரும், இளைஞர் விவகார, வேலைவாய்ப்பு அமைச்சருமான திரு. ரணில் விக்கிரமசிங்கா, பிரதி அமைச்சர் திரு. சமரவீர வீரவன்னி ஆகியோர் இன்றுகாலை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும் யாழ். மாவட்ட பாடசாலைகளின் உயர்தர மாணவர்களின் மகாநாட்டில் கலந்து கொள்வார்கள்.

பிற்பகல்; தொண்டமானாறில் நடைபெறும் விஞ்ஞான வெளிக்கள ஆராய்ச்சி நிலைய அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்துவார்கள். மாலை, சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் கலாச்சார நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்கள்.

நாளைக்காலை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்அதிபர்கள் மாநாட்டில் கலந்து கொள்வார்கள் பி. ப. யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் ஓய்வுபெற்ற ஆசிரியர்களின் பிரியாவிடை விழாவில் கலந்து கொள்வதுடன் பாடசாலை மாணவர்களால் நடாத்தப்படும் கலாச்சார நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வார்கள். (கெ)

## ஈரான் நகரில் ஈராக் தேசியக்கொடி!

தெஹ்ரான், செப். 28

நேற்று நடைபெற்ற சண்டையில் ஈராக்படைகள், ஈரானின் ஒரு நகரமான கிலானி காத்துக்குள் வெற்றிகரமாகப் பிரவேசித்து தங்கள் வசமாக்கிக் கொண்டன. இங்கு ஈராக்கின் தேசியக்கொடி பறக்கவிடப்பட்டுள்ளது. இச்செய்தியை ஈராக்கின் இராணுவ தலைமைப்பீடம் நேற்று ஊர்ஜிதம் செய்தது.

## "கூட்டணியின் ஏடு இயக்கத்தின் உண்மை நிலையை தெளிவுபடுத்தும்"

### வெளியீட்டு விழாவில் "அமிர்"

(யாழ்ப்பாணம்)

''சமஷ்டி, சம அந்தஸ்து என்று கூறிய தந்தை செல்வா தலைமையிலான தமிழரசுக் கட்சி அவற்றைவிடுத்து பண்டா—செல்வா ஒப்பந்தம் டட்லி—செல்வா ஒப்பந்தம் ஆகியவை செய்யப்பட்ட போது எமது இயக்கத்திற்கு மாறாக எழுதாத தந்தை செல்வாவின் பத்திரிகை அவர் மறைவுக்குப் பின்னர் இயக்கத்திற்கு மாறாக படுவிஷமத்தனமாக எழுதத் தொடங்கியுள்ளது. அதனால் எமது விடுதலை இயக்கம் தவறான பாதையில் செல்வதாக ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் வாழுகின்ற தமிழ்மக்கள் எண்ணத் தொடங்கியுள்ளனர். எமது இயக்கத்தின் உண்மை நிலையை தெளிவுபடுத்த எமக்கென ஒரு பத்திரிகை தேவைப்படுகிறது.''

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வாரப் பத்திரிகையான 'உதயசூரியன்' ஏட்டை வெளியிட்டு வைத்துப்பேசிய எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

பத்திரிகை வெளியீட்டுவிழா நேற்றுமாலை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் 'உதயசூரியன்' பத்திரிகையின் முதற்பிரதியை வாங்கினார். எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் பத்திரிகையின் விற்பனையை ஆரம்பித்துவைத்தார்.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில்-

''எமது இயக்கத்தின் கருத்தை மக்களுக்குத் தெளிவுபடுத்த எமது இயக்கம் கொண்ட கொள்கையிலிருந்து கடுகளவும் விலகிச் செல்லவில்லை என்பதை எடுத்துக் கூற எமது இயக்கத்திற்கென ஒரு பத்திரிகை தேவைப்பட்டது. அதனால்தான் இப்பத்திரிகையை வெளியிடுகிறோம்''. என்றார். (கொ)

### கொழும்பில் வெளியீடு

''உதயசூரியன்'' வெளியீட்டுவிழா நேற்றுமாலை கொழும்பிலும்நடைபெற்றது.

கொள்ளுப்பிட்டியிலுள்ள அரசாங்க எழுதுவினைஞர்சங்க பணிமனையில் தலைவர் திரு.கி. சதாசிவம் தலைமையில் நடைபெற்ற வெளியீட்டு விழாவில் உடுப்பிட்டி எம். பி. திரு.ஆர். ராஜலிங்கம், பத்திரிகையை வெளியிட்டு வைத்தார். புகையிரத எழுதுவினைஞர் சங்க இணைக்காரியதரிசி திரு. எஸ். லிங்கவேலாயுதம் முதற் பிரதியை பெற்றுக்கொண்டார். (ம)

போட்டோஸ்ராட் பிரதிகள்

துரை

யப்பானில் இருந்து வரவழைக்கப்பட்ட கனன் தாள்களில் உங்கள் போட்டோஸ்ராட் பிரதிகளை எம்வசமுள்ள கனன் மெசினில் பெற்றுக்கொள்ளலாம்.

ஆர். ஜி. பில்டிங், 66, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7750, 7786 தந்தி: 'SPARE' JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

பதிவு செய்த மருந்துக் கலவையாளர் (Pharmacist) தேவை. 5-10-80 ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். மனேஜர், பவர் அன் கம்பனி லிமிட். 5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 6933

யாழ்ப்பாணத்தில் ஒரு பிரபல ஸ்தாபனத்துக்கு பெண் மேற்பார்வையாளர் தேவை. க. பொ. த. சாதாரணம், ஆங்கில அறிவுடனும், பெண் ஊழியர்களை மேற்பார்வை பார்க்கும் தகைமையும் உள்ளவராக இருந்தல் வேண்டும். வயது 18–30. உடனடியாக விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 6941, C/ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 6941

### பயிற்சி

3மாத மாலைநேர எலக்றிக்கல் டிப்ளோமா பயிற்சி 06-10-80ல் ஆரம்பமாகின்றது. Institute of Engineering Technology 9/1, Stanley Road Jaffna. 6925

### விற்பனைக்கு

ஸ்ருடியோ உபகரணங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: எரம்பநாதன், சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு. 6932

### வைத்தியம்

சகலவிதமான ரோகங்களுக்கும் விசேஷமாக முறிவு, பழம் நோக்களுக்கும் சிகிச்சையளிக்கப்படும். டாக்டர் செ. சிவநேசன், நாயன்மார்காடு ஆயுர்வேத வைத்தியசாலை, நவீன சந்தைக்கு முன்பாக, 160, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6569

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்ற நன்னித்தம்பி செல்லையா கைம்பெண் நாகம்மா என்பவரது மரணசாதனத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

காசிப்பிள்ளை பரமநாதன், இல. 12, ஐயனார் கோவில் ரேட்டு, வண்ணார்பண்ணை.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல; 3551

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும் 1980ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31-ந் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1980-ம் ஆண்டு ஆடி மாதம் 9-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,

பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

என்னால் வரையப்பட்டது

இ. இராமலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.

6931


மாணவிகமலம் கொலைவழக்கு:

# 'எங்கேயடா வீரப்பா' என்று கேட்டு என்னை அடித்தனர்

## கோணேஸ்வரலிங்கம் சாட்சியம்

(நமது புலோலி நிருபர்)

நான் கடந்த பெப்ரவரி மாதம் 21ம் திகதி மாலை பருத்தித்துறை பஸ் நிலையத்தில் சுன்னாகம்போவதற்காக நின்றபோது 1ம் எதிரியையும் பரமலிங்கத்தையும் பஸ்நிலையத்தில் கண்டேன்.''

இவ்வாறு பொலிகண்டி ரியூட்டறி மாணவி கமலம் இராமச்சந்திரன் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த பொலிகண்டியைச் சேர்ந்த பூபாலு கோணேஸ்வரலிங்கம் (வயது 21) கூறினார்.

கடந்த 1980 பெப்ரவரி மாதம் 21ம் திகதிக்கும் 22ம் திகதிக்குமிடைப்பட்ட காலப் பகுதியில் பொலிகண்டியைச் சேர்ந்த ரியூட்டறி மாணவி கமலத்தை வராத்துப்பளை ஆனைவிழுந்தான் மயானத்திற்கு அண்மையில் கொலை செய்தார்களெனவும் கொலை செய்யப்பட்ட கமலம் அணிந்திருந்த 3600 ரூபா பெறுமதி மான தங்க நகைகளை அபகரித்தார்களெனவும் கந்தசாமி இராஜ்குமார் (இராஜன்) அல்லது வீரப்பன் அவரது நண்பரான பொன்சியஸ் பெர்னாண்டோ (றெபி) அல்லது றெபின்சன் ஆகியோர் மீது குற்றம்சாட்டிப் பருத்தித்துறைப் பொலீசார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்குப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினமும் 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயாவும் ஆஜராகி இருந்தனர்.

நீதிமன்றத்திற்கு உதவியாகச் சட்டத்தரணி எம். சோமசுந்தரமும், பொலீசாருக்கு உதவியாகச் சட்டத்தரணிகளான எஸ். சண்முகசுந்தரம் எஸ். சிவனருள்சுந்தரம் (காண்டீபன்) செல்விகளான சந்திரா சச்சிதானந்தம், எல். சீ. பிலிப் உமா துரைசிங்கம் ஆகியோரும் ஆஜராகி இருந்தனர்.

இவ்வழக்கு விசாரணையில் தொடர்ந்து சாட்சியமளித்த கோணேஸ்வரலிங்கம் கூறியதாவது, நான் பொலிகண்டி குடியேற்றத்திட்டத்தில் வசித்து வருகின்றேன். எனது தொழில் கடற்றொழில் தான், எனக்கு இறந்த கமலத்தையும் அவரது குடும்பத்தையும் தெரியும் அத்துடன் இவ்வழக்கின் 1ம், 2ம் எதிரிகளையும் எனக்குத் தெரியும். இறந்த கமலத்திற்கு 1ம் எதிரி என்ன முறை என்பது எனக்குத் தெரியாது. கடந்த 21-2.80 எனக்கு ஞாபகமிருக்கிறது. அன்று மாலை 6-30 மணி போல் நான் பருத்தித்துறை பஸ் நிலையத்திலுள்ள நேரப்பதிவாளர் அலுவலத்திற்கு முன்னால் நின்றேன்.

### கமலத்தை தெரியும்

நான் அங்கு நிற்கும்போது 1ம் எதிரியும், பரமலிங்கமும் கதைத்துக் கொண்டு நின்றார்கள். இறந்த கமலம் அவ்விடத்திற்கு வந்ததை நான் கவனிக்கவில்லை. இறந்த கமலத்தை எனக்குத் தெரியும். 21-2-80 க்கு முன்னர் கமலம் பஸ் நிலையத்தில் நின்றதைச் சிலதடவைகள் கண்டிருக்கிறேன்.

சுன்னாகம் போவதற்காக 767ம் பாதை இலக்க பஸ்ஸை எதிர்பார்த்தே நான் பஸ் நிலையத்தில் நின்றேன். 6-45 மணிக்கு நான் எதிர் பார்த்து நின்ற பஸ் வந்தபடியால் நான் போய்விட்டேன், அன்று இந்த வழக்கில் சாட்சியமளித்த லோகேஸ்வரன் என்பவரும் அங்கு நின்றதை நான் அவதானித்தேன்.

சாட்சியான கோணேஸ்வரலிங்கத்தை 1ம் எதிரிசார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்:- இறந்த கமலத்திற்கும் உமக்கும் காதல் தொடர்பு இருந்ததா? - இல்லை.

சட்:- லோகநாதனை உமக்குத் தெரியுமா? - லோகநாதனைத் தெரியும்- ஆனல் நல்லாகத் தெரியாது லோகநாதன் கமலத்தை விரும்புவதற்கு அடையாளமாக கமலத்தைச் சுற்றி வளைத்து வந்தார் எனக் கேள்விப்பட்டேன்.

சட்:- நீர் பொலீசிற்கு வாக்குமூலம் கொடுத்தீரா? ஆம்,

சட்:- உமக்கு லோகநாதனை நன்றாகத் தெரியும்? நெடியகாட்டில் இருக்கும் தங்கத்துரை என்பவர் தான் லோகநாதன் எனக் கேள்விப்பட்டேன்.

சட்:- பரமலிங்கத்தை எவ்வளவு காலமாகத் தெரியும்? 1 வருடமாக.

சட்:- பரமலிங்கம் உம்முடன் கதைக்கிறவரா? - ஆம்

சட்:- பரமலிங்கம் கமலத்தை காதலிப்பதாக உமக்குச் சொன்னார்? - ஆம்.

சட்:- நீர்அப்போதுநெடியகாட்டு லோநாதனும் கமலத்தை விரும்புகிறாரென்று பரமலிங்கத்திற்குச் சொன்னீரா? ஆம். 21-2-80 அன்று பருத்தித்துறை பஸ் நிலையத்தில் நான் நின்றபோது பரமலிங்கம் நெடியகாட்டைச் சேர்ந்த தங்கத்துரை என்னும் லோகநாதன் வந்தாரா என்று கேட்டார். நான் லோகநாதனைக் காட்டினேன்.

### பஸ் நிலையத்தில் காணவில்லை

சட்:- அன்று மாலை இறந்த கமலத்தை பஸ் நிலையத்தில் கண்டீரா? - இல்லை.

சட்:- பருத்தித்துறைப் பொலிசில் உமது வாக்குமூலம் எப்போது பதியப்பட்டது? கமலம் கொலை செய்யப்பட்டதற்கு 1கிழமைக்குப் பின்னுகை இருக்கலாம்.

சட்:- நீர் [illegible] பிடையில்.

2ம் எதிரிசார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயா சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்.

சட்: நீங்கள் எங்கே வசிக்கின்றீர்கள்?-பொலிகண்டி குடியேற்றத்திட்டத்தில்.

சட்: கமலம் வசித்தது உங்கள் வீட்டிலிருந்து முக்கால் மைல் தூரத்தில்?-ஆம்.

### கமலத்தை நன்றாகத் தெரியாது

சட்: கமலத்தையும் கமலத்தின் குடும்பத்தையும் நன்றாகத்தெரியும்?-ஓரளவு தெரியும்.

சட்: கமலத்தை நன்றாகத் தெரியும்?-நன்றாகத்தெரியாது.

சட்: நன்றாகத் தெரியாதென்றால்?-நான் கமலத்துடன் நெருங்கிப் பிளங்களில்லை.

### இருவர் காதலித்தனர்

சட்: கமலத்தைக் காதலித்தவர்களை உங்களுக்குத் தெரியும்?-இருவர் காதலிப்பதாகத் தெரியும்.

சட்: ஒருவர் பரமலிங்கம்?-ஆம்.

சட்: மற்றவர் நெடியகாட்டைச்சேர்ந்தவர்?-ஆம்.நெடியகாட்டுத் தங்கத்துரை (லோகநாதன்)

சட்: நீங்கள் பரமலிங்கத்தை அடிக்கடி பஸ் நிலையத்தில் சந்திப்பீர்கள்?-இல்லை.

சட்: நீர் பொலிசாருக்கு வாக்கு மூலம் கொடுப்பதற்கு 1 மாதத்திற்கு முன்னர் பரமலிங்கத்தைப் பஸ் நிலையத்தில் சந்தித்து பரமலிங்கத்திற்கு இதுதான் கமலம் என்று காட்டினீரா?-இல்லை.

சட்: 21-2-80 மாலை 6 மணியள்வில் பருத்தித்துறை பஸ் நிலையத்தில் பரமலிங்கம், லோகநாதன், 1ம் எதிரி ஆகியோரைக் கண்டதென நன்றாகச் சொல்வீரா?-ஆம்.

சட்: கிட்டத்தட்ட 30 நிமிடங்கள்வரை பருத்தித்துறை பஸ் நிலையத்தில் நின்றிருப்பீர்கள்?-ஆம் 6மணி தொடக்கம் ஆறேமுக்கால்வரை.

(7-ம் பக்கம் பார்க்க)

# "1-ம் எதிரி யந்திரம் வாங்க 5000ரூபா வேண்டுமென்றார்"

## கிராமசேவகர் சாட்சியம்

(நமது புலோலி நிருபர்)

"கடந்த பெப்ரவரி மாதம் 20ம் திகதி அவுட்போட்மோட்டார்இயந்திரம் வாங்குவதற்கு விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய என்னிடம் வந்த 1-ம் எதிரி அவுட்போட் மோட்டார் இயந்திரம் வாங்க 5,000 ரூபா வேண்டுமென்றும் கூறினார்.''

இவ்வாறு, பொலிகண்டி ரியூட்டரி மாணவி கமலம் இராமச்சந்திரன் கொலைவழக்கு விசாரணையில் சாட்சியமளித்த புலோலி கிழகு கிராமசேவை அலுவலர் திரு. எஸ். ஜெகநாதன் குறிப்பிட்டார்.

இவ்வழக்கு விசாரணையில் தொடர்ந்து சாட்சியமளித்த கிராமசேவை அலுவலர் ஜெகநாதன் குறிப்பிட்டதாவது:- கடந்த பெப்ரவரி மாதம் 21 ம் திகதி எனக்கு ஞாபகமிருக்கிறது. அதற்கு முதல் நாளான 20 ம் திகதி 1-ம் எதிரி என்னிடம் வந்தார். அவர் மீன் பிடிக்கப் பயன்படுத்தப்படும் இயந்திரமான 'அவுட்போட் மோட்டார்' வாங்குவதற்கு என்னிடம் சிபார்சு பெறுவதற்காகவே வந்தார்.

அவர் என்னிடம் அதற்கான விண்ணப்பத்தைக் காட்டினார். நான் அதைப் பார்வையிட்டேன். அவ்விண்ணப்பத்தின்படி அவுட்போட் மோட்டார் இயந்திரம் வாங்குவதற்கு அரசாங்கம் அரைவாசிப் பணத்தைத்தான் வழங்கும் என்றும் மிகுதி அரைவாசிப் பணத்தைத்தான் யாரிடமாவது மாறி எடுக்கப்போவதாகவும் சொன்னார். அத்துடன் அவர் தான் அவுட்போட் மோட்டார் இயந்திரம் வாங்கி மீன்பிடித்தொழில் செய்யப்போவதாகவும், அந்த அவுட்போட் மோட்டார் இயந்திரம் வாங்குவதற்குக் கிட்டத்தட்ட 5,000 ரூபா தேவையென்றும் சொல்லியிருந்தார்.

நான் கொடுத்த சிபார்சுக் கடிதத்தைத் தொடர்ந்து 1-ம் எதிரி அவுட்போட் மோட்டார் இயந்திரம் வாங்கினாரா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. (கு)

# 'கமலத்தைப் பற்றி நான் 2-ம் எதிரியுடன் கதைப்பதுண்டு'

## செல்வக்குமார் சாட்சியம்

(புலோலி)

நான் கமலத்தை பார்ப்பதற்காக பஸ் நிலையத்திற்கு வந்துநிற்கும் நேரங்களில் 2 ம் எதிரியும் வந்து என்னோடு நிற்பார். நான் கமலத்தைப் பற்றி 2-ம் எதிரியுடன் கதைப்பதுண்டு.

பொலிகண்டி டியூட்டரி மாணவி கமலம் கொலைவழக்கில் சாட்சியமளித்த தம்பசிட்டியைச் சேர்ந்த சதாசிவம் செல்வக்குமார் (வயது 24) மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்குப் பருத்தித்துறை நீதவான் கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

சதாசிவம் செல்வக்குமார் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:-

நான் 17-4-80 அன்று பொலிசிற்கு வாக்குமூலமளித்தேன். 2-ம் எதிரியை எனக்கு மூன்று வருடங்களாகத் தெரியும், அவரிடம் ஜீப் வண்டி ஒன்று இருப்பதும் எனக்குத் தெரியும். 1 வருடமாக அவரை நன்றாகத் தெரியும்.

நான் கமலத்தைப் பார்ப்பதற்காக பஸ் நிலையத்திற்கு வந்து நிற்கும்நேரங்களில் 2-ம் எதிரியும் வந்து என்னோடு நிற்பார். நான் கமலத்தைப் பற்றி 2 ம் எதிரியுடன் கதைப்பதுண்டு. நான் கமலத்தை விரும்புவதால் 2 ம் எதிரியுடன் கமலத்தைப்பற்றி நன்றாகக் கதைத்துள்ளேன். அதாவது கமலத்தை எனக்குத்திருமணம் பேசி கலியாணம் செய்யும் சந்தர்ப்ப மேற்பட்டிருந்தால் நிச்சயம் நான் கமலத்தை திருமணம்செய்திருப்பேன். இது பற்றி2-ம்எதிரியிடமும் சொல்லியுள்ளேன். அதற்கு 2-ம் எதிரி நான் வேறு சாதி என்றும் கமலம் வேறு சாதி என்றும் எவ்வாறு கமலத்தை நான் திருமணம் செய்யமுடி என்னிடம்யும் என்னைக் கேட்டிருந்தார்.

### கமலம் காதலிக்கவில்லை

அப்படியிருந்தும் நான் கமலத்தைக் கலியாணம் செய்யும் அளவிற்கு காதலித்தேன். ஆனல் கமலம் என்னைக் காதலிக்கவில்லை. நான் கமலத்தைப் பார்ப்பதற்கு பஸ் நிலையத்திற்கு வரும் சில வேளைகளில் 2-ம் எதிரியையும் துணைக்குக் கூட்டிவருவதுமுண்டு. 2-ம் எதிரிஎனக்குத்தான் பொலிகண்டிக்கு மீன்

(7-ம் பக்கம் பார்க்க)


### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### முதலாவது உப வரவு-செலவுத் திட்டம்–1980

1980-ம் வருடத்திற்குரிய யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் முதலாவது உப வரவு-செலவுத் திட்டம், 1980-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 6-ந் திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) 214 (2 பி) பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது.

இராசா. விசுவநாதன்,
முதல்வர்,
யாழ்ப்பாணம்
மாநகராட்சி மன்றம்.

மாநகராட்சிமன்றஅலுவலகம்,
யாழ்ப்பாணம்,
25-09-1980. 6938


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

விசுவாசம் கொள். கடவுளை நம்பி இரு. பின்னர் நீயாக எதையுமே செய்யவேண்டியிராது. காளியம்மை உன் பொருட்டுத் தானே யாவற்றையும் செய்வாள்.

— ஸ்ரீராமகிருஷ்ணர்.

## நமது நோக்கு

### ஆணைக்குழுவின் சிபார்சு

அதிகாரத்தைத் தவறுகப்பாவித்தது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தது என்ற குற்றச்சாட்டுக்களில் முன்னுள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவை ஜனதிபதி விசேஷ ஆணைக்குழு குற்றவாளியாகக் கண்டிருக்கிறது. முன்னுள் முக்கிய அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களிலும் ஜனதிபதி விசேஷ ஆணைக்குழு குற்றவாளியாகக் கண்டிருக்கிறது.

இதைத் தொடர்ந்து திருமதி சிறிமா பண்டாரநாயகாவை பாராளுமன்ற உறுப்புரிமையிலிருந்து நீக்கவும் ஏழு வருடங்களுக்கு அரசியல் உரிமைகளைத் தடை செய்யவும் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்காவுக்கு ஏழு வருடங்களுக்கு அரசியல் உரிமைகளை நீக்கவும் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான இரு பிரேரணைகளுக்கு பிரதமர் முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறுர்.

தேர்தல் குற்றச்சாட்டுக்கள், லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டவர்கள் குறிப்பிட்ட காலத்துக்கு அரசியல் உரிமை நீக்கப்பட்ட நிகழ்ச்சிகள் முன்னரும் நமது நாட்டில் நிகழ்ந்திருக்கின்றன.

1970-ம் ஆண்டு முதல் 1977-ம் ஆண்டு வரையிலான ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த அதிகார துஷ்பிரயோகம், அதிகாரத்தைத் தவறுகப் பாவித்தமை, ஊழல் நடவடிக்கைகள் பற்றி விசாரணை செய்த ஜனதிபதி விசேஷ ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறது.

இந்த அறிக்கையில் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா மீதும் மற்றும் மூவர் மீதும் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பலவும் நிரூபிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கம் இவர்கள் மீது சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ளது.

திருமதி சிறிமா பண்டாரநாயகா இந்த நாட்டின் பிரதம மந்திரியாக இருந்தவர். ஆட்சிபீடத்திற்கு மக்களால் தெரிவு செய்யப்படக்கூடிய வாய்ப்புள்ள ஒரு பெரும் அரசியல் கட்சியின் தலைவியாகவும் இருக்கிறுர். மக்களால் தெரிவு செய்யப்பட்டு இன்று பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்துவருகிறுர்.

சட்டப்படி அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை சரியாக இருக்கலாம். கடந்த ஏழு வருடங்களில் மட்டும் தான் இந்த நாட்டில் அதிகார துஷ்பிரயோகமும் ஊழலும் இடம் பெற்றதா? இப்போது மட்டும் இவை நடைபெறவில்லையா? என்ற கேள்விகள் எழுகின்றன.

இதை அறிந்துதான் இன்றைய அரசு ஆட்சிக்கு வந்த முதல் மூன்று வருடகாலத்திலும் அதிகார துஷ்பிரயோகம், தவறுன அதிகார உபயோகம், ஊழல் புகார்கள் பற்றியும் ஜனதிபதியின் விசேஷ ஆணைக்குழு விசாரணை செய்வதற்கு ஜனதிபதி அதிகாரமளித்திருக்கிறுர். இதுவரவேற்க வேண்டியது.

ஆனுலும்எத்தனை ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் வெளிவந்தன. எத்தனை சிபார்சுகள் செயல்படுத்தப்பட்டுள்ளன; எத்தனை விசாரணைகமிட்டிகளின்அறிக்கைகள் செயல்படுத்தப் பட்டிருக்கின்றன.

இப்பொழுதும் இனியும் நடைபெறும் அதிகார துஷ்பிரயோகங்கள், ஊழல்கள் யாவையும் விசேஷ ஜனதிபதி ஆணைக்குழுக்கள்தான் ஆராய்ந்து தீர்மானிக்க வேண்டுமா? அதிகாரவர்க்க மட்டத்தில் நடைபெறும் துஷ்பிரயோகங்களை ஆராய்வதெனில் நிரந்தரமாகவே ஜனதிபதி விசேஷ ஆணைக்குழுக்கள்இருக்கவேண்டுமே!

தேர்தல் கமிஷன் போல் லஞ்ச ஊழல் தடுப்புக்கமிஷனும் சுதந்திரமாக இயங்கி நாட்டின் வழமையான சட்டத்தின் கீழ் அதிகார துஷ்பிரயோகம், தவறுன அதிகார உபயோகம், லஞ்ச ஊழல் புகார்களுக்கு எதிரான நடவடிக்கை எடுப்பதற்கு (அவசியமானுல் கடும் தண்டனைகள் விதிக்கக்கூடிய முறையில் சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்தாவது) உரிய நடவடிக்கைஎடுப்பதே மேலானது.

என்னதான் சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும் முன்னுள்பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகாமீது "அரசியல் பழிவாங்கல் செயல் இது" என்ற அவப்பெயர் அரசுக்கு ஏற்படலாம். அரசியல் உரிமையை நீக்குவது பற்றி அரசு மறுபரிசீலனை செய்வதற்கு இன்னமும் காலம் பிந்திவிடவில்லை என்பதைச் சுட்டிக் [illegible] விரும்புகிறோம்.

# பாராளுமன்றத்தில் கடந்தவாரம் ஏற்பட்ட பரபரப்பும் விவாதமும்!

பாராளுமன்றக் கூட்டத்தில் பரபரப்பு!

திருமதி பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகளையும், பாராளுமன்ற உறுப்புரிமையையும் ரத்துச்செய்வதற்கான தீர்மானங்கள் அன்று வியாழக்கிழமை பிரதமரால் சபையில் சமர்ப்பிக்கப்படப் போகின்றன என்பதில் எழுந்த பரபரப்புத்தான் அது.

சபை கூடியபோது நிருபர்

நமது நிருபர் 'மாலி'

கள் கலரி நிரம்பியிருந்தது. திருமதி பண்டாரநாயக்கா, திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா ஆகியோர் தொடர்பான விசேட ஜனதிபதி விசாரணை ஆணைக்குழுவின் விசாரணை, சிபார்சுகள் அடங்கிய குறித்த ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையை பிரதமர் திரு. பிரேமதாசா சபையில் சமர்ப்பித்து இவ்வறிக்கை தொடர்பான தீர்மானங்களை அடுத்த மாதம் 16ந் தேதிய சபை ஒழுங்குப் பத்திரத்தில் சேர்த்துக்கொள்வதற்கு தாம் முன்னறிவித்தல் கொடுப்பதாக சபாநாயகரிடம் தெரிவித்து அமர்ந்தார்.

பிரதமர் அமர்ந்த சிறிது நேரத்தில் — சபைதொடங்கி சுமார் 8 நிமிடங்கள் ஆகியிருந்தபோது — திருமதி சிறிமாவோ முன்னேவர, அவரைத் தொடர்ந்து சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் எஸ். டி. பண்டாரநாயக்கா, ஆர். பி. விஜேசிறி, ஆனந்த தசநாயக்கா, அநுரா பண்டாரநாயக்க ஆகியோர் தென்புறவாயிலால் சபையுள் பிரவேசித்தனர்.

எல்லோர் பார்வையும் அப்பக்கம் அமைதியாக நோக்கியபோது. திருமதி சிறிமாவோ சிரித்தபடியே விரைவாக நடந்துவந்து தமது ஆசனத்தில் அமர்ந்தார்.

அருகே எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்துடன் அளவளாவிக்கொண்டிருந்த அவர், அநேகமாக சபை முடியும்வரை அங்கு அமர்ந்திருந்தார்.

### பரத்தன் தொழிற்சாலை எழுப்பும் மணம்

அன்றைய தினம் சபையில் பொலிஸ்பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

பிரதமரின் தேசிய சூழல் சட்டமூலம்மீது, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையிலிருந்து பரவும் தூசியின் பாதிப்புகளை விளக்கி ,அதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையின் அவசியத்தை வலியுறுத்திய காங்கேசன்துறை உறுப்பினரான திரு. அமிர்தலிங்கம் பரந்தன் இரசாயன தொழிற்சாலையைக் குறிப்பிட்டு, கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சரான திரு. சிறில் மத்தியூவைப்பார்த்து "அமைச்சரின் அத்தொழிற்சாலையிலிருந்து எழும் மணம் அவ்வழியே புகைவண்டியிலும், மோட்டார்வண்டியிலும் செல்பவர்களுக்கு சகிக்கமுடியாததாக இருக்கின்றது" என்று கூறியபோது சபையில் சிரிப்பு எழுந்தது.

மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரிக்கான, 43 லட்சம் ரூபாவுக்கான குறைநிரப்புத் தொகையொன்றின் பிரேரணை மீது திரு. அமிர்தலிங்கமும் கூட்டணியின் பட்டிருப்பு உறுப்பினர் திரு. கணேசலிங்கமும் புகார் கிளப்பினர்.

### மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி

ஒரு மத்திய மகாவித்தியாலயக் கட்டிடத்தில் பல்கலைக்கழகமொன்றை அமைத்துவிட முடியாதென்றும், ஏனைய பகுதிகளில் பல்கலைக்கழகங்களுக்கு கோடிக்கணக்கில் கட்டடங்களுக்காக பணம் ஒதுக்கப்படும்போது இதற்குமாத்திரம் 13 லட்சம் ரூபாவை மட்டும் கட்டடத்துக்காக ஒதுக்கி, வறிய உறவினரைப்போல் கிழக்கு மாகாணத்தை நடத்தும் நிலையை அனுமதிக்கமுடியாதுஎன்றும் திரு. அமிர்தலிங்கம் கூறினுர்.

ஆரம்பத்தில் விஞ்ஞானம், விவசாயபீடங்களும், பின்னர் கலைப்பீடமும் இங்கு அமையும் என்று பிரதமர் கூறியிருந்தபோது, அது ஒரு பூரணமான பல்கலைக்கழகமாக அமையவேண்டுமென்றே தாம் வற்புறுத்துவதாகவும் அமிர்தலிங்கம் சொன்னுர்,

"யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டதும் கிழக்குமாகாணத்தில் ஒரு பல்கலைக்கழகம்பற்றி எவருமே பேசவில்லை. எமது அரசு ஆட்சிக்கு வந்ததும் நானே இதனைக்கேட்டுப் பெற்றேன்" என்றுர் உள்நாட்டமைச்சர் தேவநாயகம்.

### பெலிகம்மனவுக்கு அனுதாபம்

மறுநாள் வெள்ளிக்கிழமை நீண்டகாலமாக சுகவீனமுற்றிருந்து கடைசியாக மாவட்ட அபிவிருத்திச்சபை விவாதத்தின் வாக்கெடுப்பு தினத்தன்று சபைக்குவந்து வாக்கெடுப்பில் கலந்துகொண்டு, பின்னர் கடந்தவாரம் மரணமான மாவனல்ல உறுப்பினர் திரு. ஆர். சி. பெலிகம்மனவுக்கு சபையில் அனுதாபத் தீர்மானம் நிறைவேறியது,

பெருவீதிகள் திணைக்களத்துக்கான குறைநிரப்புதொகை

(4-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### ஆறுகால் மடம் உண்மை நிலை!

ஈழநாடு பத்திரிகையில் 25-9-80 வெளியான மக்கள் கருத்து என்ற பகுதியிலே "ஆறுகால் மடம் திரும்பவும் கட்டப்படுமா¿" என்ற தலையங்கத்தில் வெளியான கருத்திற்கு அப்பகுதியிலே நீண்டகாலமாக வாழ்பவன் என்ற முறையிலும், அம்மடத்தின் இன்றைய நிலையில் அப்பகுதி மக்களின் கருத்து நிலை என்ன என்பதையும் இக்கடிதம்மூலம் சமர்ப்பிக்க விரும்புகின்றேன்.

இம் மடமும் அதன் அருகே உள்ள கிணறுமே நீண்ட காலமாக இருந்து வந்த கூற்றை நிரூபிக்கிறது. அதை அண்டியுள்ள சுற்றுப்புறம் யாவும் ஒரே வெளியாகவும் மக்கள் நடமாட்டம் அற்ற நிலையிலுமே அன்று இருந்தது, இவ்வாறு இருந்த அப்பிரதேசத்தில் வாழ்கின்ற அப்பகுதி மக்களின் தீவிர முயற்சியால் ஒரு சிறிய வாசிகசாலை உருவாக்கப்பட்டு, இன்று நகரில் முன்னணியில் திகழ்கின்ற ஏனைய வாசிகசாலைகளுடன் சரிநிகர் சமனுக திகழ்கின்றது. அன்றியும் அவ்வாசிகசாலையின் வளர்ச்சியால், மக்களின் ஆதரவோடு ஒரு பஸ் தரிப்பு நிலையத்தையும் அமைத்துக் கொடுத்துள்ளது. மேலும் இன்று பல ரூபா செலவில் ஒரு திறந்த வெளியரங்கும் இவ்வாசிகசாலையினுல் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு கல்வியுடனும் கலையுடனும் அப்பகுதி மக்களைப் பின்னிப் பிணைந்திருக்கும் இந்நேரத்தில் மக்கள் இம்மன்றத்தால் அமைக்கப்பட்ட திறந்த வெளி அரங்கில் நடைபெறப் போகும் அறிவு, கலை, சமயக் கோட்பாட்டு நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்க ஒரு வெளியரங்கு வேண்டியது அவசியமாக அமைந்தமையால் அவ்வாசிகசாலையின் நிர்வாகக் குழு கூடி ஏகமனதான தீர்மானத்திற்கமைய, இம்மடத்தை மட்டும் நீக்கி விடுவதன் மூலம் வெளி [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

### மாவட்ட அமைச்சர் அவ்வாறு பேசவில்லை!

"தமிழ் இனத்தைச் சரியான முறையில் 'அமிர்' வழிநடத்துகிறுர்." 'யாழ். மாவட்ட அமைச்சர் பாராட்டு' என்ற தலைப்புடன் நேற்று 27-9-80 ஆம் திகதி 'ஈழநாடு' மூன்றும் பக்கத்தில் வெளியான செய்தியில் மாவட்ட அமைச்சர் திரு.யூ.பி.விஜயக்கோன் பேசியதாக வெளியாகியுள்ளது தவறுகும். மாவட்ட அமைச்சர் பேசியதாக வெளியாகியுள்ள செய்திப் பகுதி முழுவதும் திரு. கே. கணேசலிங்கம் பேசியவையாகும். வாசகர்கள் இதனைத் திருத்தி வாசிக்கவும். (ஆ-ர்)

## நாடும் நடப்பும்

திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் அரசியல் உரிமை ஏழுவருடங்களுக்குப் பறிக்கப்பட்டுவிடுமா; பாராளுமன்ற உறுப்புரிமையை அவர் இழந்துவிடுவாரா?

இப்போது நாலுபேர் கூடும் இடங்களில் இதுதான் பேச்சு.

ஈராக் — ஈரான் யுத்தப் பேச்சு, மாவட்ட அபிவிருத்திச்சபைபற்றிய பேச்சுக்கள் சற்று ஓய்வுபெற்று யு என்.பி-ஸ்ரீலங்கா 'நேரடி யுத்தப் பிரகடனம்' என்பதுபோல் இப்போது சிறிமா பற்றிய பேச்சு எழுந்துள்ளது.

ஜனதிபதி விசேஷ ஆணைக்குழு சமர்ப்பித்த அறிக்கையில் கூறப்பட்ட சிபார்சுகளைத் தொடர்ந்து திருமதி சிறிமாவினதும் பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயகாவினதும் அரசியல் உரிமைகளை ஏழு வருடங்களுக்கு நீக்கிவைப்பதற்கு அரசாங்கம் சட்டரீதியான நடவடிக்கைகளைமேற்கொள்ள முன்வர்திருக்கிறது.

சாதாரண பொதுமக்களைப் பொறுத்தவரையில் ஆணைக்குழு அறிக்கையும் சட்டரீதியான நடவடிக்கையும் பின்னர் சிந்திக்கவேண்டியவை.

"இந்தியாவிலும் இப்பிடித்தான் இந்திராகாந்தியை ஜனதாகட்சிக்காரன்கள் அந்தவிசாரணை இந்த விசாரணை என்று என்னென்னவோ செய்தாங்கள். கடைசியில் ஜனதா நெல்லிமூடை மாதிரி சிதறுண்டுபோக இந்திரா ஜம் மென்று ஆட்சிக்கு வந்தா"

"ஜனதாவோடு யு. என். பியை ஒப்பிடமுடியாது. கட்டுக்கோப்பான கட்சியாக அதை அமைத்துவைச்ச பின்னர்தான் எதையும் செய்யும் சக்தியை ஜே. ஆர். பெற்றிருக்கிறுர்."

"என்னவானுலும் சிறிமா மீது அரசியல் பழிவாங்கல் முயற்சி நடந்தா அவவுக்குத்தான் இனி அதிர்ஷ்டம்."

மந்திரிசபைக் கூட்டத்திலும் கூட சிறிமாவுக்கு அரசியல் உரிமைகள் இல்லாமல் செய்யும் யோசனை [illegible] அமைச்சர் தொண்டமான் உட்படச் சில அமைச்சர்கள் ஆட்சேபித்தார்களாம்.

எவருக்கும் குடியுரிமை இல்லாமற் செய்வதை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விரும்பவில்லையென்று அமைச்சர் தொண்டமான் கூறினுராம்.

மலையக மக்களுக்குத்தானே குடியுரிமை நன்கு தெரியும்;

● ● ●

கொழும்பு மாநகர் இன்னும் சில வருடங்களுக்குள் பழைய தோற்றத்தையே காணமுடியாமல் புதுத் தோற்றத்துடன் விளங்கும்போல் தோன்றுகிறது. துரித வேகத்தில் மாற்றம் பெற்றுவருகிறது.

காலையில் பார்க்கும் கட்டிடத்தை மாலையில் காணமுடியாது. சில தினங்களில் புதிய கட்டிடத்தைத்தான் காணலாம்.

நகர வீதிகள், சந்திகள் அழகுபடுத்தப்படுகின்றன.

பல வீதிகளும், சந்தி வளைவுகளும் அழகுபடுத்தப்படும் பொறுப்பு தனியார் நிறுவனங்களிடம்ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்திலும் இதே முறையைச் செய்துபார்த்தாலென்ன?

யாழ். நகரில் புல்லுக்குளத்தைத் துப்பரவுசெய்து அழகுபடுத்தும் பொறுப்பை புதிதாக உருவாகும் மூன்று நட்

(7-ம்பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ்ஈழத்திற்கும்மாவட்ட சபைக்கும் தொடர்பு கிடையாது"

## வவனியா எம். பி. உரை

(மன்னார்)

"தமிழ் ஈழத்தை அமைக்க நாம் ஒன்றிணைந்து உறுதி பூண்டோம். தமிழ் ஈழம் உருவாகுவதை நாம் எள்ளளவும் மறக்கவில்லை. நாம் இதிலிருந்து மாறமாட்டோம்; மாற்றவும் முடியாது. இதை நாம் நன்கு உணர்ந்துள்ளோம்."

இவ்வாறு மன்னார் விளையாட்டரங்கில் மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் தலைமையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுக்கூட்டத்தில் வவுனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் கூறினார்.

அவர் தொடர்ந்து தமதுரையில் கூறியதாவது:

"தமிழ் மக்களின் பொறுப்பை நிறைவேற்றவே நீங்கள் எங்களைத் தெரிவுசெய்தீர்கள். எமது பொறுப்புகளை நாம் நிறைவேற்றுவோம். முன்னொரு காலத்தில் தமிழ்க் காங்கிரஸில் இருந்துகொண்டு மேடைகளில் தமிழரசைத் திட்டித் தீர்த்தேன். அப்போது தமிழினம் கட்சி ரீதியில் பிரிந்திருந்தது. அப்படிப் பிரிந்திருந்ததால் தமிழினம் பல கஷ்டங்களை அனுபவித்தது. அதன் பின் ஓரணியில் எல்லாக் கட்சிகளும் சேர்ந்தன. எமது மாற்ற-மறுக்கமுடியாத தமிழ் ஈழத்தை அமைக்க நாம் ஒன்றிணைந்து உறுதி பூண்டோம்.

"ஒன்றுபட்ட எமது இனத்தைப் பிரிக்க ஒருசிலர் மீண்டும் உருவாகியுள்ளார்கள். அதைத் தமிழ்மக்களுக்கு விளக்கவேண்டியது எமது கடமை. மாவட்ட சபை மசோதா உருவாகு முன்பே மாவட்டசபை பற்றி நாம் ஆராய்ந்தோம். சிலர் மாவட்டசபை என்றால் என்ன என்பது தெரியாமல் ஆராய முற்பட்டனர். மாவட்டசபை அபிவிருத்தியைக் காரணமாகக் கொண்டது. தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் அபிப்பிராய பேதமில்லை. தலைமைப்பதவி கிடைக்காத சிலரே மாவட்டசபையை ஆதரிக்கக் கூடாதென்று பேசுகிறார்கள். [ம]ாவட்ட சபையை உண்டாக்கும்படி நாம் கேட்கவில்லை. தொடர்ந்து மாறிமாறி வரும் அரசாங்கங்கள் எமது மாவட்ட அபிவிருத்திக்கு எதைச் செய்தன? அதை மாற்றி ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள மக்களின் விருப்பப்படி ஒவ்வொரு மாவட்டத்தையும அபிவிருத்தி செய்யவே மாவட்ட சபையை ஆதரிக்கிறோம்.

மாவட்ட சபையை ஆதரிப்பதால் எமது விடுதலைப் பாதையை மறந்துவிட்டோம்; தமிழ் ஈழத்தை மறந்துவிட்டோமென்று நினைக்கவேண்டாம். தமிழ் ஈழமே எமது இலட்சியம். இதிலிருந்து நாம் எள்ளளவும் மாறமாட்டோம். மாவட்ட சபைக்கும் தமிழ் ஈழத்திற்கும் எந்தவித தொடர்பும் கிடையாது.

"மாவட்ட சபையை வரவேற்காது இருந்திருக்கலாம் என்று ஒருபகுதியினர் சொல்லலாம். ஆனால் மாவட்டசபை இலங்கை முழுவதும் வரவிருக்கிறது. ஆதலால் நீங்களும் மாவட்டசபையில் பங்காளிகளாவீர். பங்காளிகளான நீங்கள் மாவட்ட சபையைத் தட்டிக் கேட்கலாம். இல்லையேல் வெளியிலிருந்துபோராடலாம்.

"அம்பாறையை நாம் இழந்துள்வோம். அதேபோல் நாம் திருமலையையும் இழக்கக்கூடாது. வவுனியாவில் இருக்கும் எனக்குத்தான் எமது நிலைமை புரியும். தலைவர் அமிர்தலிங்கத்திற்குப் பெரும் தலையிடி கொடுப்பவன் நான்தான். எல்லையில் இருக்கும் எமது நிலை மிகவும் கஷ்டம். எல்லை பறிபோகக் கூடாது. அதற்காகவும் மாவட்டசபையை நாம் ஆதரித்தோம்.

"நாம் மாவட்ட சபையை ஏற்றதைக் குறியாக வைத்துப் பேசுபவர்கள் மீது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இனக்கலவரத்தின் போது வவனியா, திருமலை தீப்பற்றி எரிந்தபோது எமக்கு உதவிசெய்ய ஒருவரும் கரம் நீட்டவில்லை. அப்போது தமிழ்மண்ணைக் காப்பாற்ற எவரும் வரவில்லை. இப்போது யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு எமது கூட்டணியை எதிர்க்கிறார்கள். உண்மையை எடுத்துச்சொல்ல எனக்கு உரிமையுண்டு; துணிவுமுண்டு. எமது இயக்கத்தைச் சுக்குநூறாக்காது தலைவருக்கு உதவியாக இருந்து சுதந்திரத்தை பாதுகாப்பது எமது கடமை. எதையும் அறியாது கண்டிக்காதீர்கள். மதவாச்சியில் உள்ள மூன்று அரசாங்க அதிபர் பிரிவுகளையும் வவனியாவுடன் இணைத்திருந்தால் வவனியா அழிந்திருக்கும். மாவட்டசபை மசோதாவில் மாவட்டங்களின் எல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதலால் நாம் மாவட்ட சபையை ஆதரித்தோம்.

"நாம் எமது தலைவருக்கும் இயக்கத்திற்கும் கட்டுப்பட்டுச் செயற்படவேண்டும். மன்னாருக்கும் வவனியாவுக்கும் நெருங்கிய ஒற்றுமையுண்டு. நீங்கள் மற்றவர்களின் காலைப் பிடிக்காது உங்களால் தெரிவு செய்யப்படவிருக்கும்மாவட்ட சபையை ஆதரியுங்கள்". (சு)

# பாராளுமன்றத்தில்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரேரணை ஒன்றின்மீது ஊர்காவற்றுறை உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் பாலங்கள், படகுசேவைகள் தொடர்பாகவும் வவனியா உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம் வீதிகள் தொடர்பாகவும் முறைப்பாடும் கோரிக்கையும் விடுத்தனர்.

குறிகாட்டுவான் பாலம், பண்ணைப் பாலம், காரைநகர்-ஊர்காவற்றுறைப் பாலம், மகாதேவா பாலம் ஆகியன பற்றி பண்டிதர் கேள்விக் கணைகள் தொடுத்தார்.

படகுச்சேவைகள்பற்றிகுறிப்பிட்ட பண்டிதர், யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் சில பேச்சுக்களும் நடவடிக்கைகளும் அரசியல்வாதிகளைமக்களுக்குப் பொம்மைகளாக காட்டும் விதத்தில் அமைகின்றன என்றும் அதுபற்றி தாம் இச்சபையில் குறிப்பிடவேண்டியது அவசியம் என்றும் கூறினார்.

### மணிமேகலையும் அலை அரசியும்

நெடுந்தீவு-குறிகாட்டுவான் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 'மணிமேகலை' என்ற படகு, யாழ். அரசாங்க அதிபரின் முயற்சியால் கட்டுவிக்கப்பட்டதென்று அப்படகின் வெள்ளோட்ட வைபவத்தில் கலந்துகொண்ட பிரதி நெடுஞ்சாலைகள் அமைச்சர் பேசினாரென்றும், அது முற்றிலுந் தவறுஎன்றும் சொன்ன பண்டிதர், நெடுந்தீவு சேவைக்காக கட்டப்பட்ட 'அலை அரசி' என்ற படகை ஊர்காவற்றுறை, எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு ஆகியவற்றுக்கிடையே அரசியல் காரணங்களுக்காக ஒரு சேவையை ஏற்படுத்தி, அப்படகை அதில் ஈடுபடுத்தியதில், தினமும் அப்படகு 6 மணித்தியாலங்கள் நயினாதீவில் சும்மா நிற்கிறது என்றும் கூறினார்.

குறித்த குறைநிரப்புத் தொகை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பாராளுமன்ற வீதி தொடர்பானதே என்றும், உறுப்பினர்கள் தெரிவிக்கும் புகார்கள் புதிதாக அமைக்கப்படவுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின்கீழ் மறைந்துவிடும் என்றும் பிரதமரின் சார்பில் பிரேரணையைச் சமர்ப்பித்த பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் திரு. வின்சன் பெரேரா தெரிவித்தார்.

### இலங்கை நிர்வாக சேவைத் தேர்வு

ஏற்கனவே பலதடவைகளில் நல்லூர் உறுப்பினர் திரு. எம். சிவசிதம்பரமும், சுதந்திரக் கட்சியின் ஹரிஸ்பத்துவ 2-வது உறுப்பினர் திரு. விஜேசிறியும் 1979 மே மாதம் நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை தேர்வின் பெறுபேறுகள் தாமதம் பற்றி பிரஸ்தாபித்திருந்த போது அன்றுவெள்ளிக்கிழமை அரசாங்கக் கட்சியிலிருந்தே முன்னாள் பெருந் தோட்டக் கைத்தொழில் அமைச்சரான ஃடுவல உறுப்பினர் திரு. எம். டி. எச். ஜயவர்த்தன ஒத்திவைப்பு பிரேரணையின் போது கேள்வி எழுப்பினார்.

கல்வி அமைச்சரும், அமைச்சின் செயலாளரும்' அமைச்சரவையும், குற்றப் புலன் விசாரணை பிரிவினரும் குறித்த தேர்வு தொடர்பாக திருப்தி தெரிவித்திருக்கிறபோது, ஏன் அதை மேலும் தாமதிக்கச் செய்து சந்தேகத்தை எழுப்ப வேண்டும்? என்று கேட்டார் கடுவல உறுப்பினர்.

செயலாளர் திரு. ஸ்டான்லி கப்பஹேயின் அறிக்கையை அமைச்சரவை அங்கீகரிக்கவில்லை என்று தெரிவித்த அமைச்சர் வின்சன்ட் பெரேரா பெறுபேறுகள் இப்போது பொது நிர்வாக அமைச்சின் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சின் குறைநிரப்பு பிரேரணை ஒன்றின் மீது திருமலை உறுப்பினர் திரு. இரா. சம்பந்தனுக்கு அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா பதிலளிக்கையில் அடுத்த வாரம் முதல் மீனவர்க்கான கடனுதவி மீண்டும் வழங்கப் படும் என்றார்.

ஜப்பான் அரசு நன்கொடையாக வழங்கியுள்ளன பாரிய மீன்பிடிப்படகு ஒன்றுக்கு 'கபிற்ஸ் மாலு' (ஊர்காவற்றுறை மீன்) என்று பெயரிடப்படவிருப்பதாக பண்டிதரைப் பார்த்துக் கூறினார் அமைச்சர் பெஸ்டஸ்.

சிறிமாவோ தொடர்பான பரபரப்புடனேயே ஆரம்பித்த கடந்த வார அமர்வு, சிறிமாவோவுடன் திருமதி இந்திராவின் தொலைபேசிப் பேச்சுத் தொடர்பாக எழுப்பப்பட்ட பிரச்னையுடனேயே முடிவடைந்தது.

திவுலப்பிட்டிய உறுப்பினர் கிளப்பிய இப்பிரச்னை குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாக உறுப்பினருக்குப் பின்னர் பதிலளிப்பதாகவும் பதில் வெளிநாட்டமைச்சர் பதிலளித்தார்.

# புதிய ஜி. சி. ஈ. பரீட்சைகள் அவசியமில்லை

## பிரதிக் கல்வி அமைச்சர் சபையில் தகவல்

(கொழும்பு)

ஜி. சி. ஈ. பரீட்சை விடைத்தாள்கள் கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி புதிதாக பரீட்சைகளை நடத்த வேண்டிய அவசியமில்லை எனக் கல்வி அமைச்சு முடிவுசெய்துள்ளது.

இவ்வாறு பிரதி கல்வி அமைச்சர் திரு. வீரவன்னி சமரவீர நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா, கொத்மலை எம். பி. திரு. ஆனந்த தஸநாயக்கா ஆகியோரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே பிரதி கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

பரீட்சை விடைத்தாள்கள் கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தொடர்ந்து நடைபெற்று வரும் விசாரணைகள் முடிவுற்றதும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும் என்றும். திரு. சமரவீரா கூறினார்.

குறிப்பிட்ட பரீட்சைகள் தொடர்பாக 88 ஆயிரம் விடைத்தாள் பார்சல்கள் பரிசீலனை செய்யப்படவேண்டியிருப்பதனாலேயே விசாரணைகள் தாமதமாகின்றன என்று அவர் கூறினார், (ம-இ)

# மன்னாரில் 'திருமுறைவிழா': 'இராசு' ஆரம்பித்துவைப்பார்

(யாழ்ப்பாணம்)

மன்னார் இந்துசமய வளர்ச்சிச் சங்கத்தினரின் திருமுறை விழா இன்று திங்கட்கிழமை தொடக்கம் மூன்று நாட்கள் வரை மன்னாரில் நடைபெறும்.

முதலாம்நாள் நிகழ்ச்சியை பிரதேச அபிவிருத்தி, இந்து கலாச்சார அலுவல்கள், தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சர் திரு. செ. இராசதுரை ஆரம்பித்து வைப்பார். சங்கக் கொடியை சிவதர்மவள்ளல் க. கனகராசா ஏற்றி வைப்பார்.

இந்நிகழ்ச்சியில் திருமுறை ஓதுதல், வரவேற்புரை, ஆசியுரை ஆகியவற்றுடன் "ஆத்மஜோதி" ஆசிரியர் திரு நா. முத்தையா, புலவர் அ. திருநாவுக்கரசு ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவும், நல்லை ஆதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் இன்னிசை விரிவுரையும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

இரண்டாம்நாள் நிகழ்ச்சியில் மாணவர் பேச்சு, சித்தாந்தசிகாமணி இ. வடிவேலுவின் சிறப்புச் சொற்பொழிவும், திரு. க. சித்திரவேலின் பண்ணிசையும், கலாநிதி அ. சண்முகதாஸின் சிறப்புச் சொற்பொழிவும், ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் இன்னிசை விரிவுரையும் நடைபெறவுள்ளது.

மூன்றாம்நாள் நிகழ்ச்சியின் போது மாணவர் பேச்சு, சைவப் பிரகாசர்திரு. சி. சண்முகவடிவேல், திரு. மு. ஞானப்பிரகாசம் ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவும், கதாகாலக்ஷேபமணி தா. பொன்னம்பலத்தின் இன்னிசை விரிவுரையும் நடைபெறும்.

இவ்விழாவில் குச்சுப்பிடி நடனம், துர்க்கை பூசை, சிவநடனம், கதகளி நடனம் உட்பட தென்னிந்திய இந்து ஆலயங்கள், திருவிழாக்கள் என்பனபற்றிய திரைப்படக் காட்சிகளும் இடம்பெறும். (வெ)

# ஆறுகால்...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

கிடைக்கும் என்ற நோக்குடன் அதை நீக்க முற்பட்டதும், அது மாநகர சபையின் அங்கீகாரம் பெறத் தவறியதால்; முதல்வர் தக்க நடவடிக்கை எடுத்து இதில் சம்பந்தப்பட்ட சகலரையும் பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தி, அதன்பின் இம்மடம் உண்மையில் எடுக்கப்படவேண்டுமா? வேண்டாமா? என்ற விடயத்தை மாநகர சபை முதல்வரும், சபையுமே முடிவு கொள்ள வேண்டும் என்றும் வாசிகசாலை நிர்வாகத்திற்கு பணித்துள்ளனர்.

மடத்திலிருந்து நீக்கப்பட்ட மரங்கள் ஒரு இடத்தில் வாசிகசாலை நிர்வாகத்தினரால்பேணி பாதுகாக்கப்படுகிறது. அது எந்தத் தனி நபரின் ஆதிக்கத்திலுமல்ல!

அப்பகுதி மக்கள் ஆதரவுடன் செயற்பட்டுவரும் வாசிகசாலை நிருவாகம் இன்று சிறிதாக உள்ள வைரவர் ஆலயத்தை புனருத்தாரணம் செய்வதாகவும், யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் பிரயாணிகள் தங்குவதற்கு மற்றுமோர் பஸ் தரிப்பு நிலையத்தை அமைத்துக் கொடுப்பதாகவும், அப்பகுதி மக்களும் கையொப்பமிட்டு யாழ். மாநகர முதல்வருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளார்கள்.

அப்பகுதி மக்களின் நல்நோக்கையும், தன்னலம் அற்ற சேவைகளையும் மாண்புமிகு மாநகர முதல்வர் சீர்தூக்கிப் பார்த்து அம்மடம் வேண்டுமா? வேண்டாமா? என்ற [illegible] நல்க வேண்டும் என் [illegible] அப்பகுதி மக்களின் நல்லாசையாகும்.

அயலவன்
பத்மநாதன்
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

# "நோயாளர்கள் அவதி"

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டை, கொட்டைக்காடு அரசினர் வைத்தியசாலையில் தண்ணீர் இன்றி நோயாளர்கள் அவதியுறுகின்றனர். [illegible] யிலுள்ள கிணற்று நீர் வற்றி [illegible] இதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் வட்டு எம். பி. யிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றனர். (க)

# மாணவர் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

வவனியா. உடையார்கட்டு கனிஷ்ட உயர் வித்தியாலய மாணவர்களினால் உடையார் கட்டின் நெல் வயல்களில் சிரமதான மூலம் களை பிடுங்கப்பட்டது. இவ்வைபவம் மேற்படி பாடசாலை அதிபர் திரு. பி. சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. உடையார் கட்டு விவசாயப் போதனாசிரியர் திரு. எம். ஜி. பாலசிங்கம், விவசாய விரிவாக்க சேவையாளர் திரு. எம். விஜயகுமாரும் இவ்வைபவத்தை ஆரம்பித்து வைத்தனர். (கொ)

# ஊக்குவிப்புப்படி இப்போதும் கிடைக்கிறது

(பச்சிலைப்பள்ளி)

பொது வேலைநிறுத்தத்தையடுத்து நாட்டில் அவசரகாலச் சட்டம் பிரகடனப்பட்டிருந்த போது, வடபிராந்திய போக்குவரத்துச்சபையினால் வேலை செய்யும் ஊழியர்களுக்கு தினமும் வழங்கப்பட்டு வந்த ஊக்குவிப்புப்படியான ஐந்து ரூபா தற்போது வசரகாலச் சட்டம் நீக்கப்பட்டபோதிலும் தினமும் வழங்கப்பட்டு வருகிறது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொழியியல்—3

# சொற்கள் பொருளின் தன்மை இழந்து உருபாதல்

வடமொழி அமைப்பைத் தழுவி தமிழில் வேற்றுமை எட்டாக வகுக்கப்பட்டது மொழியியலாளர்களின் விமர்சனக் கண்டிப்புக்கு ஆளானதைக் கடந்தகட்டுரையில்கண்டோம் இருப்பினும் தமிழுக்கும் வடமொழிக்கும் இடை வேற்றுமை உணர்த்தப்படும்வகையில் பலத்த வேறுபாடும்உண்டு வடமொழியில் காணப்படுவது போலல்லாது தமிழில் பெயர்ச்சொல் உருபு ஏற்ற எழுவாய் வேற்றுமை காணப்படுவதில்லை அல்வாறே ஒருமை பன்மை உணர்த்தவும் தமிழில் வேறு வேறான உருபுகள் வழங்குவதில்லை. தமிழில் ஒரே விகுதி திணைபால் எண் முதலியவற்றை உணர்த்துகிறது. ஆனால் வடமொழியிலும் இந்து ஐரோப்பிய மொழிகளிலும் திணை பால் எண் விளக்க வேறு வேறான உரு கள் தென்படுகின்றன (ஆனால் 6ம் வேற்றுமைபுறநடை). தமிழ்மொழியில் பெயர்ச் சொற்கள் வடமொழி போலன்றி உருபுகளை ஏற்கும்போது அதிகமாற்றம் அடைவதில்லை. தமிழில் பெரும்பாலும் அஃறிணையில் சாரியைகள் பெற்றே பெயர்ச் சொற்கள் மாற்றமடைகின்றன. பெயர்ச் சொல்லுடன் உருபுகள் அல்லது சாரியைகள் ஒட்டிக் காணப்படுவதால் பொருள் சிதைவு அல்லது பொருள் வேறுபாடு காணப்படுவதில்லை. இவ்வாறாக பல அடிப்படை வேறுபாடுகள் தமிழ்-வடமொழி வேற்றுமை அமைப்புக்கு இடை இருப்பது தெட்டத்தெளிவு. தொல்காப்பியர்,

'பெயர் ஐ ஒடுகு
இன் அது கண் விளியென்
னும் ஈற்ற'

**— பற்றிமாகரன் —**

என சொல்லதிகாரத்து 62வது சூத்திரத்தால் வேற்றுமையின் பெயரீட்டு முறையை விளக்குகிறார். அதேவேளை நன்னூலார் தனது 292வது சூத்திரத்தில்,

பெயரே ஐ ஆல் கு இன் அது
கண் விளியென்றாகு மவற்
றின் பெயர் முறை

என்கிறார். இவ்விரு சூத்திரங்களும் பற்றிய கோட்பாட்டு ஆய்வில் இறங்குமுன் உருபுக்களின் தோற்றப்பாடு பற்றி சிறிது சிந்திக்கவேண்டும். ரூப (Rupa) என்ற சொல்லில் இருந்து திரிந்த சொல்லே உருபு என்று தமிழில் வழங்கப்படுகிறது. பொருள் வேற்றுமையை உணர்த்த அறிகுறிகளாகஇருக்கும்இவ்வேற்றுமை உருபுகளை எட்டுவகை எனக் கூறுகின்றது தமிழிலக்கண நூல்கள் முதன் முதலில் வேற்றுமைப் பொருளை உணர்த்த முழுச்சொற்கள் வழங்கியிருக்கவேண்டும் இன்றும் பொருள்தரவல்ல சொற்களே காலப்போக்கில் பொருள் தன்மையிழந்து உருபுகளாக அமைந்துவிட்டன என்றும் மொழியியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவ்விதம் பொருள்தரவல்ல சொற்கள் பொருள் தன்மையிழந்து எவ்வாறு சொல்லுருபு ஆகியிருக்கும் என்று சிந்திப்பது இன்றைய மொழியியல் வளர்ச்சிக்கு துணையாக அமையுமெனக் கொள்ளலாம்.

கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள் ''கவிஞரும் மொழியும் - ஒரு மொழியில்நோக்கு'' என்னும் ஆய்வுக்கட்டுரையில் இலக்கியங்கண்டதற்கு இலக்கணம் கூறும் மரபு தமிழ் மொழியில் இருப்பது பற்றி சிறிது விளக்குகிறார்''. எமது பண்டைய இலக்கணங்களும் மேலைத்தேய மரபு வழிப்பட்ட இலக்கணங்களும் எழுத்து வழக்குக்கே முக்கியத்துவம் கொடுத்தன. இதனால் எழுதப்பட்ட இலக்கியங்களுக்கே இலக்கணம் யாக்கப்படும் எனும் மரபு தமிழில் தோன்றியது'' எனக் கூறும் அவர், தொல்காப்பியர் தன்னுடைய இலக்கணத்தை தான் வாழ்ந்த காலத்து வழக்கினையும் செய்யுளையும் நாடி அமைத்துள்ளார் என்று பனம் பாரனார் கூறும் கூற்றில் வரும் 'வழக்கு' என்பது பற்றியும் விமர்சித்துள்ளார். தமிழ் இலக்கண உலகில் அதிகமாகப் பேசப்படும் வழக்கு எனும் இச்சொற்றொடரின் சொல்லாட்சி பேச்சு வழக்கை அல்ல எழுத்து வழக்கையே குறிக்கிறது எனத் தெளிவாகக் காட்டுகிறார். எனவே தொல்காப்பியர் காலத்தே மொழியியலில் இலக்கணம் தனிக் கூறாக அமையாது இலக்கியத்திற்கு பக்கத் துணையாக நின்றிருக்கிறது என்பது தெளிவு, ஆகவே தான் தொல்காப்பியத்துக்கு வழிநூல் செய்த பவணந்தியாரும் நன்னூலில் தொல்காப்பியர் ஒரு சூத்திரத்தால் உருபுக்களின் பெயரீடாக ஒவ்வொன்றைக் கூறி வேறு சூத்திரத்தால் அதன் விரிவு கூறுவதை எடுத்து நோக்காது தொல்காப்பியருக்கும் பவணந்திக்கும் இடைப்பட்ட காலத்தில் இலக்கிய எழுத்துகளில் காணப்படும் வேற்றுமை உருபுகளை எடுத்து நோக்கி உருபுக்களின் பெயரீட்டுக்கு ''இலக்கியத்திற்கு இலக்கணம் காணும்பாணியில் இலக்கணத்திற்கு இலக்கணம் காணாது'' ஒரு சூத்திரத்திலேயே ஒன்றுக்கு மேற்பட்ட உருபுகளைக் கூறி விடுகிறார். இதுவே இன்று வேற்றுமை பற்றிய சிக்கல் நிலையை மொழியியல் ஆய்வில் தோற்றுவிக்கிறது. அது மட்டுமல்ல இவ்வாறு எழுதப்பட்ட எழுத்திற்கே இலக்கணம் காணும் தன்மையினால் பெருந்தொகையான உரையாசிரியர்கள் [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

## பொருளியல்:

# தேசிய வருமானம்: -- ஒரு கண்ணோட்டம்

கடந்த கட்டுரையில் தேசிய வருமானத்துக்கு வரைவிலக்கணம் கண்டோம். மேற்படி வரைவிலக்கணத்திலிருந்து ஒரு சில முடிபுகள் திட்டவட்டமாகக் கூறப்பட்டிருப்பதை உணரலாம். தேசிய வருமானத்தைக் கணிப்பிடுவதற்கு மட்டுமல்ல எந்த ஆய்வினைப் புரிவதாயினும் அங்கு ஒருதெரியப்பட்ட களம் அவசியம். ஏனெனில் பல்வேறு களங்களில் அல்லது வித்தியாசமான களங்களில் ஒரு குறிப்பிட்ட உண்மையை அறிதலோ ஒப்பிடலோ அசாதாரணமான

**-எஸ். எஸ். தங்கராஜா-**

ஒன்றாகும். இங்கு களமாக அமைவது ஒரு குறிப்பிட்ட அரச எல்லையுள் அடங்கும் உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடும் (களவு, கள்ளக்கடத்தல், சுவீப் போன்றன சட்டரீதியானதாகவோ, பொருளாதார நடவடிக்கையாகவோ கொள்ளப்படுவதில்லை) ஒரு நிலப்பரப்பில் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியான ஒரு வருடத்தில் ஏற்படும்மொத்த உற்பத்தி அல்லது வருமான அல்லது செலவின நடவடிக்கைகளை கூறுவது. இங்கு இறுதிப் பண்டங்கள் சேவைகள் என்பது மிகக் கவனத்துக்குரிய விடயமாகும். ஏனெனில் ஒரு உற்பத்தி முதல் விளைவு இடைநிலை முடிவுப் பொருட்கள் என்னும் நிலைகளைப் பெறுவதாகும். இவ்வுற்பத்தியில் முதல் விளைவு அல்லது இடைநிலை உற்பத்திகள் முடிவுகள் அடங்குதலால் முடிவுப் பொருட்களே கணிப்பீட்டுக்கு உரியனவாகும். இதனைப் பின்வரும் உதாரணம் மூலமாகத் தெளியமுடியும்.

உதாரணம் 1.

கரும்பு உற்பத்தி:-
1000 டொலர்(மில்லியன்)

சீனி ஆலைக்கொள்வனவு:-
200 டொலர்(மில்லியன்)

சீனி உற்பத்தி:-
1200 டொலர்(மில்லியன்)

மேல்வரும் தரவுகள் 1979ம் ஆண்டில் தரப்பட்ட தரவுகள் என்று கொள்வோம். 1980ம் ஆண்டு ஜனவரியில் 1979ம் ஆண்டுக்கான உற்பத்திகள் கணிப்பிடப்படும் போது தவறுதலாக கீழ்வரும் முறையில் கணிக்கப்படலாம்.

1970 கரும்பு உற்பத்தி:-
1000 மி. டொலர்

1979 சீனி உற்பத்தி:-
1200 மி. டொலர்

1979 மொத்த உற்பத்தி:-
2200 மி. டொலர்

இங்கு 1979 ம் ஆண்டுக்கான மொத்த உற்பத்தி 2200 மி. டொலர் என்று கணிக்கப்பட்டது தவறாகும். சரியாகச் சொன்னால் 1979ம் ஆண்டுக்கான மொத்த உற்பத்தி (கரும்பு 800, சீனி 1200) 2000 மில்லியன் டொலர்களாகும். இவ் உதாரணம் மூலம் மூலப் பொருட்கள் இருதடவைகள் கூட்டப்படாது தடுக்கவே இறுதி முடிவுப் பொருட்கள் என்பது குறிப்பிடப்பட்டதை அவதானிக்கவேண்டும்.

ஈற்றில் 20 ம் நூற்றாண்டில் பணப்பொருளாதாரமே இயக்கில் உள்ளதனாலும் பண்டப் பரிவர்த்தனையின் குறைபாடுகளை நீக்கி பொதுமையாகவும் பிற்போடப்பட்ட கணக்கிட்டு ஒப்பீடுகளை செய்வதற்காகவும் பணரீதியான மொத்தப் பெறுமதி என்ற பதம் சேர்க்கப்பட்டுள்ளது. ஒட்டு மொத்தமாக எமது வரைவிலக்கணத்தை மீண்டும் ஒரு முறை அவதானித்தால் இது தெளிவாகும்.

''குறிக்கப்பட்ட ஒரு நாட்டின் குறிக்கப்பட்ட ஒரு காலப்பகுதியின் (1 வருடம்) உற்பத்தியாக்கப்பட்ட இறுதிப் பொருட்கள் சேவைகளின் பணவடிவிலான மொத்தப் பெறுமதியே தேசிய வருமானம் எனலாம்.

(8-ம் பக்கம் பார்க்க)

## அரசியல் விஞ்ஞானம்:

# 'தேசியஇனம்' என்பதின் அரசியல் முக்கியத்துவம்

அரசியல் விஞ்ஞானத்தில் 'நாடு' (State) எனும் சொல் அதிமுக்கியமான தொன்று. இதற்கு பிளன்ட்சிலி, உட்ரோ வில்சன், புரூஸ்டர், மேக்ஐவர் கார்னர், லாஸ்கி போன்ற பல அரசியல் அறிஞர்கள் பலதரப்பட்ட வரைவிலக்கணங்களை வகுத்துள்ளனர். இவற்றுள் பேராசிரியர் லாஸ்கியின் வரைவிலக்கணம் இன்று பலராலும் அங்கீகரிக்கப்படும் ஒன்று எனலாம். ''குறிப்பிட்ட ஒரு ஆட்சி நிலத்தில் மற்ற ஸ்தாபனங்களின் மேல் ஆதிக்கம் கொண்டு அரசாங்கம் மக்கள் என்று பிரிக்கப்பட்டு நிரந்தரமாக அமைந்துள்ள சமுதாயம் அரசாகும்'' என்பது லாஸ்கியின் கருத்து. இவ்வரசியல் அறிஞர்களின் கருத்துக்களைத் நாடல்ல. அதன் இறைமை இந்தியாவின் கைகளிலேயே உள்ளது. எனவே தமிழக அரசாங்கத்தின் முதலமைச்சர் என்பதே சரியான பிரயோகம் இப்படிப்பல.

மக்கள். நிலப்பரப்பு, அரசாங்கம் இறைமை எனும் நான்கும் நாட்டின் கூறுகளாக அமைவதால் இவற்றைப் பற்றிச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

முதலில் மக்கள் என்பதை எடுப்பின் ஆரம்ப அரசியல் விஞ்ஞானிகள் மக்கள்தொகை பற்றியே இம்மக்கள் , எனும் பதம் நாட்டின் கூறாக அமைவதாக கருதினார்கள். கிரேக்கத்தின் பண்டைய அரசியல் மாமேதைகள் பிளாட்டோ அரிஸ்டோட்டில் என்போர் தொகுத்துநோக்கின் நாட்டினை அமைக்கும் கூறுகள் என்ன என்பதை காணலாம். மக்கள் நிலப்பரப்பு, அரசாங்கம், இறை ஆகிய நான்குமே நாட்டின் கூறுகள் (Elements of the State) என நிர்ணயிக்கப்பட்டுள்ளன. எனவே இந் நான்கு நிபந்தந்தனைகளையும் பூர்த்தி செய்யும் அமைப்பே தனிநாடு எனப்படலாம். ஆனால் நாம் நாளாந்த பாவனையில் தெளிவற்ற முறையிலேயே பயன்படுத்துகின்றோம். உதாரணமாக திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களைத் தமிழ் நாட்டின் முதலமைச்சர் என்கிறோம். ஆனால் ஒருதனி முறையே 5040 குடிகள் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அரசில் இருக்க வேண்டும் என வரைவு படுத்துவதைக் காணலாம். இவ்வாறாக குருவாகிய பிளாடடோவும் சீடராகிய அரிஷ்டோட்டிலும் மாறுபட்ட கருத்துக்களை மக்கள் தொகை பற்றிக் கூறி சிறிய மக்கள் தொகையா? பெரிய மக்கள் தொகையா? நாட்டுக்குத் தேவை எனும் வாதத்தை ஆரம்பிக்க இது வரலாற்றோடு வளர்ந்து வந்து இன்றும் ஒரு பிரச்சினையாக நிற்கிறது. அதிக மனித சக்தி பொருளியலை வளர்க்கும்

(8ம் பக்கம் பார்க்க)

# அறிவியல் பூஞ்சோலை

[அறிவியல் மணம் கமழும் இப்பூஞ்சோலையில் உயர்தர மாணவர்களின் பயன்பாட்டிற்கென மொழியியல், அரசியல் விஞ்ஞானம், பொருளியல் ஆகிய பாடங்களுக்கான அம்சங்கள் தொடர்ந்து வெளியிடப்பட்டுவருகின்றன. அவற்றைத் தொடர்ந்து ஏனைய பாடங்களுக்கான விடயதானங்களும் இங்கே மணம் கமழும்.]

## உங்கள் கேள்விகளுக்கு விடை

அறிவியல் பூஞ்சோலையில் வெளிவரும் கட்டுரைகள் தொடர்பாக விளக்கக் கேள்விகள் எழுதி அனுப்பவிரும்பும் மாணவர்கள் உங்கள் கேள்வியை எழுதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கூப்பனையும் இணைத்து அனுப்பினால் பதில் அளிக்கப்படும். தனிப்பட்ட முறையில் விடைகளைப் பெறவிரும்புபவர்கள் முப்பத்தைந்து சத முத்திரை ஒட்டிய சுயவிலாசமிடப்பட்ட கடித உறையையும் இணைத்து அனுப்ப மறக்க வேண்டாம்.

மேலும் இப்பகுதியில் உங்களுச்கு எப்பாடல்கள் அல்லது பாடங்களின் எப்பிரிவுகள் பிரசுரிக்கப்பட வேண்டுமெனவும் எழுதி அனுப்பினால் உங்கள் தேவைகளை பூர்த்திசெய்ய முயற்சிப்போம்.

### கேள்விக் கூப்பன்

1 பெயர்: ..............................
2 விலாசம்: ..............................
[illegible] வகுப்பு: ..............................
4 கேள்வி: ..............................
5 கையொப்பம்: ..............................

கேள்விகளை வேறுதாளில் எழுதியும் கூப்பனோடு இணைக்கலாம்.

அனுப்பவேண்டிய முகவரி:
அறிவியல் பூஞ்சோலை
'ஈழநாடு' யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானின் பெரு நகரங்களினுள் ஈராக் ஊடுருவல்!

லண்டன், செப். 28

ஈரான்—ஈராக் எல்லையில் பயங்கரமான யுத்தம் நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ள அதே வேளையில் ஈரானின் மிகப்பெரிய நகரமான அல்வாகிற்குள் ஈராக் படைகள் புகுந்துவிட்டதாக பாக்தாத் வானொலி தெரிவித்தது.

ஈரானின் மிகப் பெரிய துறைமுக நகரமான கோரம்ஷாரைக் கைப்பற்றுவதற்காக ஈராக் படைகள் தீவிர பிரயத்தனம் எடுத்து வருகின்ற போதிலும் ஈரானிய ந்துருப்புக்கள் வீராவேசத்துடன் எதிர்த்தாக்குதலை நடாத்தி வருவதால் அங்கு கடும் சண்டை நடைபெற்று வருகிறது.

## ✱ ஐ.நா. வின் இறுதி முடிவு இன்று

ஈரான்—ஈராக் யுத்தத்தை நிறுத்துவது தொடர்பாக தனது தீர்மானத்தை விவாதிப்பதை ஐ. நா. பாதுகாப்புச் சபை நேற்று பின்போட்ட போதிலும் இன்று மீண்டும் கூடி ஆராயலாமென்று தெரியவருகிறது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் அங்கத்தவர்கள் நேற்றுத் தனித்தனியே கூடி ஆராய்ந்த போதிலும் நிலைமையைச் சமாளிக்க எவ்வாறான முடிவை எடுப்பது என்பது குறித்து எந்தத் தீர்மானமும் எடுக்கமுடியவில்லை.

## ✱ ஈரானிய விமானங்கள் குண்டுமாரி

திடீர்திடீரென ஈராக்கின் மீது தாக்குதலை நடாத்திவரும் ஈரானிய விமானங்கள் நேற்றும் ஈராக்கின் நகரங்களில் மிகத் தாழ்வாகப் பறந்து குண்டுமாரி பொழிந்தன.

ஈரானின் இத்தாக்குதலை நேரில் கண்ட மக்கள் பரபரப்புடன் நகரின் மறைவிடங்களைத் தேடி ஓடி ஒளித்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## ✱ இஸ்லாமிய மாநாட்டுத் தூதுக்குழு

40 நாடுகள் அங்கம் வகிக்கும் இஸ்லாமிய மாநாடு; சமாதான பேச்சுக்களை நடாத்துவதற்காக தனது தூதுக்குழுக்களை பாக்தாத்துக்கும் தெஹ்ரானுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

ஏற்கனவே சமரச முயற்சியில் ஈடுபட்டுள்ள பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அரபாத் நேற்று தெஹ்ரானில் ஈரானியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தினர். ஏற்கனவே இவர் பாக்தாத்தில் ஈராக் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடாத்தியிருந்தார்.

## ✱ எண்ணை ஏற்றுமதி முற்றுகத்தடை

ஈரான் தனது எண்ணை விநியோகத்தை ஏற்கனவே நிறுத்தியிருந்தபோதிலும் ஈராக் தனது விநியோகத்தை நடாத்தி வந்தது. துருக்கி, சிரியா ஆகிய நாடுகளூடாக குழாய்கள் மூலம் ஈராக் இதனை செய்துவந்தது. நேற்று ஈரானியப் படைகள் திடீரென அக்குழாய்கள் மீது குண்டுகளை வீசிச் சேதப்படுத்தியதைத் தொடர்ந்து அந்த விநியோகமும் தடைப்பட்டுள்ளது.

## ✱ இந்தியாவில் ஆர்ப்பாட்டம்

ஈரானின் மதத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னியின் நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இந்தியாவிலுள்ள ஈரானிய மாணவர்கள் நூற்றுக்கணக்கானோர் நேற்று புதுடில்லியில் ஆர்ப்பாட்டங்களை நடாத்தியதாக அங்கிருந்து வெளியாகும் செய்திகள் தெரிவித்தன. (கு)

## இந்தியாவில் ஆறு பிரதான எதிர்க்கட்சிகள் இணைந்தன!

புதுடில்லி, செப். 28

அரசின் சில நடவடிக்கைகளுக்கு கண்டனம்தெரிவித்து வரும் முக்கிய ஆறு எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன.

விலை ஏற்றம், வகுப்பு ஒற்றுமை, சிவில்உரிமை ஆகியவை தொடர்பாக ஒன்றிணைந்துள்ள இக்கட்சிகள் நேற்று மாநாடொன்றை நடாத்தியது.

லோக்தள், அர்ஸ் காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்ஸிஸ கம்யூனிஸ்ட் உட்பட பிரதான கட்சிகளே தற்போது ஒன்றிணைந்துள்ளன. (கு)

## இடமாற்றம்

(மண்டைதீவு)

ஊர்காவற்றுறை பெருந்தெருக்கள் திணைக்களமாவட்ட உதவியாளர் திரு. அ. மாசிலாமணி எதிர்வரும் தை மாதம் தொடக்கம் நோர்வூட் பெருந்தெருக்கள் திணைக்கள அலுவலகத்திற்கு இடமாற்றம்பெற்று செல்லவிருக்கின்றார். (கு)

## பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள்

புதுடில்லி, செப். 28

செய்திப் பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளியிடுவது இந்தியாவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

புதுடில்லியில் நேற்றுக்கூடிய பத்திரிகை ஆலோசனைச்சபை மேற்கண்ட முடிவை எடுத்துள்ளது. 40 வீதம் விளம்பரங்கள் மட்டுமே பிரசுரிக்க அனுமதிக்கப்படுவர். (கு)

## ஜனதா சேராது

சென்னை, செப். 28

ஜனதாக்கட்சி வேறு எந்தவொரு கட்சியுடனும் சேர்ந்து கொள்வதற்கான சாத்தியமில்லையென்று முன்னாள் இந்தியப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கூறினார்.

இந்திய எதிர்க்கட்சிகள் இணைப்புப்பற்றி சென்னையில் பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பேசுகையிலேயே திரு. தேசாய் இத்தகவலைத்தெரிவித்தார். (கு)

## றேலரும் வலையும் திருட்டு

(மன்னார்)

பேசாலை கடலில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டிருந்த சுமார் ஒரு லட்சம் ரூபாபெறுமதியான றோலர் ஒன்றும் வலையும் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பேசாலையைச்சேர்ந்தறெக்ஸ்குலா என்பவருக்குச்சொந்தமான றோலர் பேசாலைக் கடலில் நங்கூரமிட்டு இருந்ததாகவும் இரவு வேளையில் இனம் தெரியாதநபர்களால் நங்கூரம் அறுக்கப்பட்டு றோலர் திருடப்பட்டதாகவும் அதே றோலரில் கடற்கரையில் வைக்கப்பட்டிருந்த இன்னொருவருக்குச் சொந்தமான வலையையும் எடுத்து ஏற்றிச் சென்றிருப்பதாகக் கூறப்படுகிறது. (க)




புதுமையான போனஸ் திட்டம்
உள்ள ஒரு சேமிப்பு

வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி சேமிப்போருக்கு ஒரு கவர்ச்சியான அம்சத்தை அளிக்கின்றது.

சேமிப்பு கணக்கு வழங்குவது வருடத்திற்கு 10% வட்டி

உங்கள் கணக்கிலிருந்து ஒருவருடம் பணத்தை மீளாதிருந்தால் வருடத்திற்கு மேலதிகமாக 5% வட்டி ஆகவே வருடத்திற்கு 15% வட்டி வழங்கப்படும்.

உங்களால் இயன்ற பொழுது சேமியுங்கள். கிரமமாக பணம் கட்ட வேண்டும் என்ற நியதி இடையாது.

எம்முடன் கணக்கு வைத்துக் கொள்ளுங்கள். மேலதிக விசேஷ சேவைகளை அளிப்பதில் தனிப் பெருமை பெற்றவர்கள். எமது தலைமைக் காரியாலயத்தில் அல்லது எமது கிளை அலுவலகங்களில் முழுவிபரமும் அறிந்து கொள்ளலாம்.

கொள்ளுப்பிட்டி – 26174 கொட்டாஞ்சேனை – 23471
கண்டி – 08 - 3163 அல்லது 08 - 3217
யாழ்ப்பாணம் – 276 காலி – 09 - 2377
கலேவெல்ல – 95 மாத்தளை – 0662 - 485
வெள்ளவத்தை – 86097 மாத்தறை – 041 - 2819

வரையறுக்கப்பட்ட
இலங்கை வர்த்தக வங்கி

57 சேர் பாரன் ஜெயதிலக்கா மாவத்தை கொழும்பு 1.
தொலைபேசி - 28193/5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 13-ம் திகதி
(திங்கட்கிழமை)
(29 - 9 - 1980)

மேடம்: செய்தொழில் தடுமாற்ற நிலை தென்படும் வேண்டிய ஒருவரைப் பகைத்துக் கொள்ளநேரிடும் குடும்பத்தில் சிறு பிணி தோன்றும் மனத்திடம் விரும்பத்தக்கது.

இடபம்; விரக்திநிலை உருவாகும் வேண்டாத தொடர்புகளால் தொல்லைகள் தோன்றக்கூடும், உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம் நன்கு சிந்தித்தபின் செயலாற்றுக.

மிதுனம்: பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர் குடும்பப் பிரச்சனைகளில் சுமுகமான நிலை தென்படும், சுற்றுடலிலும் வேண்டியதைச் சாதிக்கக்கூடிய செல்வாக்குப் பெருகும். இன்று பொன்னாள்.

கடகம்: குடும்பக்கவலை தலைதூக்கும் பிதாவழிப் பிணிக்கும் இடமுண்டு, அன்னியர்கள் மூலம் தொல்லைகள் தோன்றி மறையும் பணவிவகாரத்தில் அபிப்பிராயபேதங்கள் உருவாகும் மிகவும் சுமாரானதினம்.

சிங்கம்: வாகனச் சொந்தக்காரர்களுக்கு சிறப்பானதினம், ஆசிரியர் வாழ்க்கையில் பாராட்டப்படுவார்கள், மாணவர்களாயின் கல்வித்துறையில் நல்ல முன்னேற்றமுண்டு பொதுத்துறையில் நாட்டம் ஏற்படும்.

கன்னி: மக்களால் மகிழ்ச்சி மனம் நிறைந்த வாழ்வு புதுமையில் நாட்டம் புதுப்பொலிவும் உண்டு.

துலாம்: கன்னல் வாழ்வு கருத்தினில் காதல் மோசம் மின்னல்போல் மறையும் இன்றே வாட்டிவிடும் பிணியும் தானே.

விருட்சம்: பொன்னான வாழ்வு பெண்ணாலே கிட்டும், கண்ணியம் கடைவிரிக்கும் கடமையும் சிறக்கும்.

தனு: அடுத்தவரை நம்புவதால் ஆபத்து மிகவுண்டு, வீண் செலவு வேண்டாம் விபரீதம் விளைந்திடும்.

மகரம்: உள்ளப்படுதாவில் உவகை துள்ளும் பத்திரிகைத் துறையில் தொழில் புரிவோர் பாராட்டுதல்களைப் பெறுவர்.

கும்பம்: எதிலும் முன்னணியில் நிற்பீர்கள் பிறரின் கவனம் உங்கள்மீது செலுத்தப்படும், சொந்தமாக தொழில் செய்வதில் ஆர்வம் பிறக்கும், அரசாங்க ஊழியராயின் பதவி உயர்வுகிடைக்கலாம்.

மீனம்: மெத்தவும் பொருள் சேரும், மேலிடத்து ஆதரவு தப்பாமல் கிட்டும், தித்திக்கும் செய்தியுடன் தேனான வாழ்வும் உண்டு.

சோதிடக்கலாநிதி
**க. வேலுப்பிள்ளை**

# நாடும் நடப்பும்

3-ம் பக்கத் தொடர்ச்சி

சத்திர ஹோட்டலிடம் ஒப்படைக்கும் யோசனைக்குச் சிலர் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்களாம்! ஏனோ?

யாழ். நகரில் கன்னாதிட்டிக்குளம், வண்ணான்குளம் இவற்றையும் தனியார் நிறுவனத்தின் பொறுப்பில் சில காலத்துக்காவது ஒப்படைத்தால் குளங்கள் ஆழமாக்கப்பட்டு, சேறு அகற்றிச் சுத்தமாக்குவதுடன் நகருக்கு அழகூட்டவும் வழிகிடைக்கும். இவைதான் நடைபெறவிட்டாலும், நகரில் நுளம்புத் தொல்லையாவது குறையமாட்டாதா?

ஊர்சுற்றி

# சங்காபிஷேகம்

(வேலணை

வேலணை மண்கும்பான்பதி ஸ்ரீ நாசிங்க வைரவசுவாமி கோவிலில் அண்மையில்சங்காபிஷேக விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சங்காபிஷேகத்தை [illegible] முருகன் கோவில் பிரதம குரு [illegible] நடாத்திவைத்தார்.

# எங்கேயடாவீரப்பா கமலத்தை

(2ம் பக்கத் தொடர்ச்சி)

சட்: எங்கே நின்றீர்கள்?- நேரப்பதிவாளர் அலுவலகத்திற்கு முன்னால்.

சட்: அப்படி நீங்கள் நின்று பஸ் ஏறும்வரை கமலத்தைக் காணவில்லை?-இல்லை.

சட்: அப்படி கமலம் வந்திருந்தால் கண்டிருப்பீர்கள்?- நான் நேரப் பதிவாளர் அலுவலகத்திற்கு முன்நின்ற போது ஒரு தடவை மனைவிக்கு நகை எடுக்க நகைக்கடைக்கும் பின்பு இன்னொரு கடைக்கும் போய் வந்தேன்.

சட்: நீங்கள் அங்கு நின்ற போது பஸ் நிலையத்தில் 1ம் எதிரியையும் பரமலிங்கத்தையும் கண்டீர்கள்?-பஸ் நிலையத்தின் வடக்குப்புறமாக 1ம் எதிரியும், பரமலிங்கமும் தைத்துக்கொண்டுபோவதும்திரும்பி வருவதுமாக இருந்ததைக்கண்டேன்.

சட்: நீங்கள் இக்கொலைச் சம்பவம் பற்றி எப்போ அறிந்தீர்கள்?-சுன்னாகம் போன 3, 4 நாட்களின் பின்.

சட்: 21-2-80க்குப் பின் எப்போ பொலிகண்டிக்கு வந்தீர்கள்?-கிட்டத்தட்ட ஒருகிழமைக்குப் பின் எனது மனைவியுடன் வந்தேன்.

## என்னை அடித்தனர்

நான் சுன்னாகத்தால் வந்து வீட்டில்இருந்தேன். அப்போது வல்வெட்டித்துறையைச் சேர்ந்தசிலர்வந்து என்னை வெளியே அழைத்துச் சென்று என்னை யாரிடமோ வலை வாங்கியதாகவும் அதன் - ரைவாசிக்காசு கொடுக்கவில்லை என்று கதைத்துக்கொண்டு ஊறணி ஆஸ்பத்திரியடியால் கூட்டிக் கொண்டுசுடலையடிக்குப்போனதும் 'எங்கேயடா வீரப்பா' என்று கேட்டு அடித்தார்கள். அவர்களின்அடி அகோரத்தால் நான் மூர்ச்சித்துவிட்டேன். மூர்ச்சித்தநான் பின்னர் பொலிஸ் ஜீப் வண்டியில் இருந்ததேஎனக்குத்தெரிந்தது. பின்னர்பருத்தித்துறை பொலிசிற்குக் கொண்டுவந்தார்கள்.

சட்: உம்முடைய வாக்கு மூலம் அன்றே பதியப்பட்டதா?-இரண்டு, மூன்று நாட்களின்பின், அடிகாயங்களுக்கு மந்திகை அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றேன்.

சட்: சுன்னாகத்திலிருந்து வல்வெட்டித்துறைக்கு வரும் வரை இந்த வழக்கில் யார் யார்தேடப்படுகிறார்கள் என்று உமக்குத்தெரியுமா?-தெரியாது ஆனால் நான் சுன்னாகத்தில் இருந்தபோது 'ராஜன் அண்ணா' தேடப்படுகிறார் எனப் பத்திரிகைகள் மூலமாக அறிந்தேன்.

எனக்கு ஊறணி அரசினர் வைத்தியசாலைக்கு அருகாமையில் உள்ள சுடலையில்வைத்து அடித்தவர்கள் நான் 21-2-80 அன்று மாலை பஸ் நிலையத்தில் நின்றதையும் குறிப்பிட்டுச் சொல்லியே அடித்தார்கள். எனக்கு அடித்தவர்களின் எண்ணிக்கை 6பேர்வரை இருக்கும்.

சட்: நீங்கள் பொலிஸ் நிலையத்திற்கு வந்தபோது லோகநாதன், பரமலிங்கம் ஆகியோரையும் பொலிசார் அழைத்து வந்தார்களா?-நான் அங்கு வந்தபோது பரமலிங்கத்தைக் கண்டேன். அவர் அங்குதடுத்துவைக்கப்பட்டிருந்தார். நெடியகாட்டைச் சேர்ந்த லோகநாதனும் அங்கு இருந்தார். (க)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வாங்கப் போகும் நாட்களில் கமலமும் தாயும் பஸ்சிற்காகக் காத்துநிற்பதைக் காண்பதாகவும் இதனால் தனக்கு அவர்களைத் தெரியும் என்றும் சொன்னார்.

நீதவான்: 2-ம் எதிரியை எப்படி உனக்குத் தெரியவந்தது? பருத்தித்துறையில் கண்டு பழகினேன்.

நீதவான்: உனக்குச் சசிதரனைத் தெரியுமா? ஆம் அவர் என்னுடன் பருத்தித்துறைக் ஹாட்லிக் கல்லூரியில் ஒன்றாகப்படித்தவர்.

நீதவான்: சசிதரன் கமலத்தை விரும்பினாரா? சசிதரன் கமலத்துடன் பஸ்சில் போவதைக் கண்டு சசிதரன் கமலத்தை விரும்புவதாக எண்ணினேன்.

நீதவான்: சசிதரன் கமலத்துடன் பஸ்சில் போனதை எப்போ கண்டாய்? என்னைச் சட்டத்தரணி ராஜகுலேந்திரன் கமலத்தின்பின் செல்ல வேண்டாமென எச்சரிக்கை செய்தபின். அதாவது கமலம் கொலைசெய்யப்படுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னதாக இருக்கலாம்.

நீதவான்: பன்று சற்று முன்னர் உன்னை கமலத்தை யாராவது விரும்பியதுபற்றித் தெரியுமா என்று கேட்டபோது அதற்கு எனக்குத் தெரியாது என்று கூறினாய்? அப்பொழுது கமலத்தைச் சசிதரன் விரும்பினாரென்பதை ஏன் சொல்லவில்லை? சசிதரன் கமலத்துடன் பஸ்சில் போவதனாலேயே அவர் கமலத்தை விரும்பினார் எனச் சொல்லக் கூடியதாக இருக்கிறது. ஆனால் வேறு யாரையும் விரும்பினாரா என்று நீதிமன்றத்திற்களித்த பதிலில் சொல்ல முடியாமல் இருந்தது. பத்திரிகைகளில் செய்திகள் பிரசுரிக்கப்பட்டிருந்ததைப் பார்த்த போதுதான் சசிதரன் கமலத்திற்குக் கடிதங்களில் எழுதினார் என்பதை அறிந்தேன். அத்தகவலை வைத்துக்கொண்டு தான் இப்போது நான் நினைத்தேன். அந்த நாட்களில் சசிதரன் கமலத்துடன் பஸ்சில் போனது அவர் கமலத்தை விரும்பியபடியால் என்று.

சசிதரன் கமலத்துடன் பஸ்சில் சென்றதை நான் கண்ட காலங்களில் சசிதரன் பல்கலைக் கழகப் புகுமுகப் பரீட்சை எடுத்துவிட்டு இருந்த காலமாகும்.

## பருத்தித்துறைக்கு வருவார்

கடந்த 21-2-80 இரவு நான் வீட்டிலிருந்தேன். எனது வீடு புலோலி மேற்கு வண்ணான் துறையில் உள்ளது. சசிதரனின் சகோதரியின் கணவர் பருத்தித்துறையில் 'குமார் அச்சகம் என்ற அச்சுக்கூடத்தை வைத்திருக்கிறார். எனவேதான் சசிதரன் அடிக்கடி பருத்தித்துறைக்கு வந்துபோவார்.

அடுத்து பருத்தித்துறை குகன் ஸ்ரூடியோ புகைப்படப் பிடிப்பாளரான சிவனேஸ்வரன் கொலையுண்ட கமலத்தின் சடலம் கிடந்த இடத்தில் வைத்து எடுக்கப்பட்ட 6 புகைப்படங்களை அடையாளம் காட்டி இவை யாவும் கொலையுண்ட கமலத்தை கொலைசெய்யப்பட்டுக் கிடந்தஇடத்தில் வைத்து என்னால் எடுக்கப்பட்ட படங்கள் என்றும் புகைப்பட மூலப் பிரதிகளையும் தான் பொலிசாரிடம் கொடுத்ததாகவும் கூறி அடையாளம் காட்டினார்.

# காவலூரில் வாந்திபேதி

(வேலணை)

ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பில் வாந்திபேதி நோய் அதிகமாகப்பரவி வருவதாகத் தெரியவருகின்றது.

சென்றவாரம் இப் பகுதியைச்சேர்ந்த ஒருவருக்கு வாந்திபேதி நோய் ஏற்பட்டிருப்பதைக் கண்டுபிடித்த சுகாதாரப் பகுதியினர் உடன் ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுத்தனர்.

மேலும் இப்பகுதியில் இந்த நோயைப்பரவவிடாது தடுப்பதற்கு சுகாதாரப் பகுதியினர் தடைமருந்துகளைக் கையாளுவதில் அதிக கவனமெடுத்து வருவதுடன் குடிதண்ணீருக்காக வேலணை சாட்டியில் இருந்து பவுசர் மூலமாகக் கொண்டுவரப்படும் தண்ணீருக்கு குளோறின் பாட்டு விநியோகிக்குமாறும் உத்தரவுகள் பிறப்பித்துள்ளனர்.

(கு)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 930
சனி, ஞாயிறு 2-15
ரஜனிகாந்த் - படாபட் ஜயலக்ஷ்மி
ஆறிலிருந்து அறுபதுவரை

ஹரன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். ஜெயலலிதா நடித்த
ராமன்தேடியசீதை

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
கைகொடுத்த தெய்வம்

ஸ்ரீதர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, மாலினி பொன்சேகா, ஸ்ரீதேவி, ஜெய்சித்ரா
பைலட் பிரேம்நாத்
விரைவில்
எம். ஜி. ஆர். - லதா நடித்த
மீனவ நண்பன்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கார்த்திகைத்தீபம்
எதிர்பாருங்கள்
ஒரேவானம் ஒரேபூமி

ராணி - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் ( இரு வேடங்களில் ) ஸ்ரீப்ரியா
சட்டம் என் கையில்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
THE DEEP

லிடோ
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்—நிர்மலா
எடுப்பார் கைப்பிள்ளை

WINDSOR (JAFFNA)
IT'S EVIL ... IT'S HORRIFIC
IT'S CONCEIVED BY THE DEVIL
Daily 4 Shows
Daily at 10-30 a m, 2-00, 4-30, & 7-00 p m only
JOAN COLLINS — EILEEN ATKINS
RALPH BATES — DONALD PLESANCE
in
"I DON'T WANT TO BE BORN"
Color - Adults only

சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 4 காட்சிகள்
வெற்றிவிழாக் கொண்டாடும் 3-வது மாதம்!
நீயா?
"வெள்ளி விழா"
வண்ணச்சித்திரம்
விரைவில் திசைமாறிய பறவைகள் கலர்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கலைஞர் கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.
ஜெய்சங்கர்-ஜெயசித்திரா—அசோகன்
மற்றும் பலர் நடித்த
வண்டிக்காரன் மகன்
(ஈஸ்மன் கலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 ஆம் வகுப்பு
புதிய விஞ்ஞானம்
வினா—விடை

தாவர விலங்குகளைப் பாகு படுத்தும் இருகிளைத் திறவு கோள் முறை உட்பட விளக்கக் குறிப்புகளும் உள்ளன.
ஆலோசனை செ. வேலாயுதபிள்ளை B.A; Sc. Trd.
விலை 8-25

காந்தளகம்
213 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

ஈழநாடு 50 சதம்
EELANAADU

# பாஸ்போர்ட் மோசடி

(மன்னார்)

கொழும்பு முகத்துவாரத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் போலி பாஸ் போட்டுடன் இந்தியா செல்ல முயன்றபோது அதிகாரிகளிடம் சிக்கிக்கொண்டார்.

வேறு ஒருவருக்குச் சொந்தமான பாஸ் போட்டில் உள்ள புகைப்படத்தை அகற்றி விட்டு அதில் தனது புகைப் படத்தை இணைத்து இந்தியாவுக்குச் செல்ல முயற்சித்த இவர் தலைமன்னாரில் வைத்து குடிவரவு, குடியகல்வு அதிகாரியிடம் அகப்பட்டார்.

# அகில இலங்கை சாதனை!

(யாழ்ப்பாணம்)

யாழ். அமெச்சூர் மெய்வல்லுநர் விளையாட்டுச் சங்கம் நடாத்திய வெள்ளிவிழா விளையாட்டுப் போட்டியில் யாழ். விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செல்வகௌரி வரதகுமார் பெண்களுக்கான 100 மீட்டர் தடைதாண்டல் ஓட்டப்போட்டியை 15.7 செக்கனில் ஓடிமுடித்து அகில இலங்கை சாதனையொன்றை நிலைநாட்டியுள்ளார்.



முன்னர் சுருங்கனி டி சில்வா 100 மீட்டர் தடை தாண்டல் ஓட்டப்போட்டியை 15.8 செக்கனில் ஓடிமுடித்து அகில இலங்கை சாதனையொன்றை நிலைநாட்டியிருந்தார். இப் போட்டியில் இவரின் சாதனைக்கு சமமான அகில இலங்கை சாதனையை நிலைநாட்டியிருந்த செல்வகௌரி வரதகுமார் தற்பொழுது இச்சாதனையை முறியடித்துள்ளார்.

யாழ். அமெச்சூர் மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டியின் சரித்திரத்தில் அகில இலங்கை சாதனையொன்று நிலைநாட்டப்பட்டது இதுவே முதல்தடவையாகும்.

இப் போட்டியில் சிறந்த சாதனைகளுக்கான கேடயத்தை செல்வகௌரி வரதகுமார் பெற்றுக்கொண்டார். இவர் திரு, திருமதி இரட்சகனின் புதல்வியாவார்.

இவ் விளையாட்டுப் போட்டி யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (செ)

## சொற்கள்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வேறு வேறு விளக்கங்களை கூறப்போய் மயங்குவதைக் காணலாம். பதினறு உரையாசிரியர்களின் பெயர்களை டாக்டர் க. ப. அறவாணன் அவர்கள் தனது எழுநூறு ஆண்டுகளில் நன்னூல் எனும் நூலில் கூறி அவர்களுடைய உரைத்தன்மை உரை வேறுபாடுகள் என்பவை பற்றி விளக்குகிறார். ஆயினும் இவர்களில் பெரும்பாலானவர்கள் பெரும்பாலான விடயங்களில் ஒருமுகமான கருத்தையே கொண்டிருக்கின்றனர். எனவே "எழுதிய நூல்களுக்கு இலக்கணம் கூறும்" தொன்மரபே இச்சிக்கல்களின் காரணம் எனலாம், ஆனால் தற்கால மொழியியலாளர் மொழியைத் தனியாய் (இலக்கியத்தின் பக்கத்துணையாக மட்டுமன்றி பேசுவோரின் உள்ளுணர்வு —ஒலிப்பிறப்பு — இலக்கணக்கூறு) பகுத்தாயத் தொடங்கிய காலக்கட்டத்தில் பேச்சு மொழிக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

எனவே நாம் இன்று பொருள் தரவல்ல சொற்களாக நின்று காலகெதியில் உருப்புக்குறியீடுகளாக மாறி நிற்கும் சில சொற்களை நோக்குவதன் மூலம் "உருப் பகுப்பின்" தன்மைகளை புரிந்துகொள்ள முடியும். யோகேஸ்வரி கணேசலிங்கம் அவர்கள் தனது வேற்றுமையும் சொல்லொழுங்கும் எனும் கட்டுரையில் நீக்கல் பொருளை உணர்த்த ஐந்தாம் வேற்றுமை உருவாகிய இருந்து உபயோகிக்கப்படுவதுபோல வளவுக்காலே வந்தான் வீட்டுக்காலே வந்தான் என "உக்கால" எனும் உருபு இன்று உபயோகிக்கப்படுவது பற்றிக் குறிப்பிடுகின்றார், இந்த 'உக்கால' எனும் உருபு 'உள்ளுக்குள்ளாலே' எனும் நீண்ட சொல் "உள்ளாலே" எனக் குறைந்து ஒலித்து காலகெதியில் "உக்கால" என மாறியிருப்பதைக் காணலாம் இங்கு "உக்கால" எனும் சொல்லைத் தனியே எடுப்பின் அதற்கு தனி அர்த்தம் தமிழ்ச் சொல் பரவையில் இல்லை. ஆகவே பொருள் தரவல்ல சொற்கள் காலப்போக்கில் பொருள் தன்மையிழந்து எவ்வாறு சொல்லுருபு ஆகியிருக்கும் என்பதை புரிந்துகொள்ள முடிகிறது. (தொடரும்)

## அரசியல்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கருதுவோர் மக்கள் தொகை அதிகரிப்பை ஆதரிக்க சனத்தொகை கூடுவதால் பகிர்வு பாதிக்கப்பட்டு சமூக நலத்தன்மை குறைவுபடுகின்றது எனக் கருதுவோர் மக்கள் தொகை குறைப்பை வரவேற்க இன்றுவரை "மக்கள் தொகை" அரசுக்களில் முக்கிய இடம் வகிக்கிறது. சோவியத் ரஷ்யா மக்கள் பெருக்கத்தை இன்றும் அதிகரித்து அதிக பிள்ளை பெறுபவர்களுக்கு சலுகைகள் பல வழங்குவதோடு பத்துக்குமேல் பெற்றெடுத்த தாய்மார்களை வீரத்தாய்மார் என கௌரவிப்பதையும் காணலாம். அதேவேளை நமது நாடு உட்பட இந்தியா, சீனு போன்ற நாடுகள் குடும்பக் கட்டுப்பாட்டினை வளர்க்கத் துடிப்பதையும் காண்கிறோம்.

'மக்கள் தொகை' என்பது நாட்டின் அபிவிருத்தியினைக் கருதி முன்னிடம் பெற்றாலும் மக்கள் பற்றிய 'தேசியஇனம்' (Nationality) எனும் அம்சமே நாடு (State) பற்றிய அமைப்பில் இன்று முக்கியத்துவம் பெறுகிறது. தேசிய இனங்களுக்கு மட்டுமே தனிநாடு அமைக்கும் உரிமை உண்டு எனக் கருதப்படுவதாலேயே தேசிய இனம் எனும் சொல்லு முக்கியத்துவம் பெறுகிறது. பேராசிரியர் லார்ட் பிரைஸ் என்பவர் தேசிய இனம் பற்றி விதந்துரைக்கும் வரைவிலக்கணம்: தேசிய இனம் என்றால் என்ன என்பதற்குச் சிறந்த விளக்கமாக அமைகிறது. மொழி, இலக்கியம், கருத்துக்கள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றால் இணைக்கப்பட்ட மக்கள் தொகுப்பு தேசிய இனமாகும். (A nationality is a population held together by certain ties, as for example language and literature, ideas, customs and traditions, in such a way as to feel itself a coherent Unity distinct from other populations similarly held together by like ties of their own)

தேசிய இனம் எனும் தகுதி ஒரு இனத்திற்கு எவ்வளவு தூரம் முக்கியமென்பதற்கு தேசிய இனத்தவர் அமைக்கும் அரசே தேசம் எனும் பேராசிரியர் பிரைஸின் கூற்றே சான்றாகும்.

—தொடரும் —

## தேசிய...

5-ம் பக்கத் தொடர்ச்சி

### தேசிய வருமானச் சுற்றோட்ட விளக்கம்

மனித வாழ்க்கையில் சகல நிகழ்வுகளுமே (பகுத்தறிவுச் சிந்தனையில்) சுற்றோட்டமாய் அமைவனவாகும். இந்த வகையீடு தேசிய வருமானத்துக்கும் பொருந்தும். ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் வருமானமானது சுழற்சியில் ஈடுபடும் பொழுது எவ்வகையான மாற்றங்களை பெறுமென்பதை விளக்குவதாய் வருமானச் சுற்றோட்டம் அமைகிறது. இங்கு ஒரு நாட்டின் தேசிய வருமானமானது சுற்றோட்டத்தின் போது இரு உருவ அமைப்புக்களைப்பெறும்.

(1) அடைக்கப்பட்ட பொருளாதாரத்தின் வருமான சுற்றோட்டம். (2) திறந்த பொருளாதாரத்தின் வருமானச் சுற்றோட்டம்

அடைக்கப்பட்ட பொருளாதாரத்தில் அரச தலையீடற்ற உள்நாட்டின் உற்பத்தி செலவீடு வருமானம் தவிர வெளியுலகத் தொடர்புகளான ஏற்றுமதி இறக்குமதிகள் இடம்பெரு. மாறாகதிறந்த பொருளாதார வருமானச் சுற்றோட்டத்தில் அரசுசார் உள்நாட்டின் மொத்த உற்பத்தி மொத்த செலவீனம் மொத்த வருமானம் என்பவற்றுடன் வெளிபுலகப் பொருளியல் தொடர்பான ஏற்றுமதி இறக்குமதி என்பனவும் சேர்த்துக் கொள்ளப்படும். மேலெழுந்தவாரியான இவ் விளக்கத்தின் பின்பு தேசிய வருமானச் சுற்றோட்ட ஆய்வுள் செல்வோம்.

— தொடரும்

# மாவட்டசபைகளை எதிர்க்க கம்யூனிஸ்ட் கட்சி போட்டி!

(யாழ்ப்பாணம்)

"மாவட்ட அபிவிருத்திச் சபைகள் தமிழ்பேசும் மக்களை எதிர் நோக்கியுள்ள எந்தவொரு அடிப்படைப் பிரச்னைகளுக்கும் தீர்வுகாண உதவாது"

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்டக்குழு அண்மையில் நிறைவேற்றிய தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத் தீர்மானத்தின் விபரம் வருமாறு!

"உண்மையான அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு மாவட்டசபை அமையுமானல் அதனை மனப்பூர்வமாக வரவேற்கலாம். தமிழ்மக்களைப் பொறுத்தவரை இம்மாவட்ட சபை எவ்வளவு தூரம் பலனளிக்கும் என்பது காலப்போக்கில் தான் தெரியவரும். இம்மாவட்டசபை தமிழ் பேசும் மக்களை எதிர்நோக்கியுள்ள எந்தவொரு அடிப்படை பிரச்னைக்கும் தீர்வு காண உதவாது. இதற்கு மாறாக ஜனதிபதியின் சர்வாதிகார அதிகாரத்தையும் ஆட்சியில் நவகலோனிச முறையையும் மாவட்ட மட்டத்தில் ஸ்திரப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பே இந்த மாவட்டசபை.

எனவே இப்பிற்போக்குத்தன்மையையும் அடக்கு முறையையும் எதிர்க்க வேண்டியது ஒவ்வொரு முற்போக்கு எண்ணம் கொண்டவர்களினதும் ஜனநாயகம் விரும்புவர்களினதும் கடமையாகும். இப் போராட்டத்தை முன்எடுத்துச் செல்வதிற்காக மாவட்ட சபைக்குள்ளும் புறமும் போராட வேண்டுமென இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி தீர்மானித்துள்ளது.

இதனை அமுல் நடத்தும் வகையில் நடைபெறவிருக்கும் மாவட்டசபை தேர்தலில் போட்டியிடுவது அவசியமெனக்கருதி அதற்காக வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதெனவும் யூ. என்.பி. அரசுக்கு எதிரான சகல சக்திகளையும் அணிதிரட்டுவதெனவும் தீர்மானித்துள்ளது. (கு)

# இன்று இசைவிழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை இளம் கலைஞர் மன்றத்தின் ஒன்பதாவது ஆண்டு இசைவிழாவின், நான்காம்நாள் நிகழ்ச்சிகள் இன்று மாலை யாழ். திவ்வியஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறுகின்றன.

இ. க. ம. மியூஸிக் அகடமி மாணவர்கள் பாட்டு, செல்வி தர்ஷினி திலகராஜா வீணை, இ. க. ம. மியூஸிக் அகடமி மாணவர்கள் தாளவாத்தியம், செல்வி கௌசல்யா நாகராஜா வீணை, செல்வி சுஜாதா பத்மசிகாமணி பாட்டு. சாயி சத்தியா தணிகாசலம் வீணை; செல்வி தக்ஷாயினி லிங்கநாதபிள்ளை புல்லாங்குழல், செல்வி மகேஸ்வரி நாகலிங்கம் பாட்டு, தலைமையுரை: திரு. கே. ஞானச்சந்திரன் [மேலதிக மாவட்ட நீதிபதி யாழ்ப்பாணம்], திரு. செந்தில் நாதன் பாட்டு, திரு. வி. எம். நவரட்ணம் பாட்டு, நாதஸ்வர இசை.

# புலோப்பளை கொலைவழக்கு சாட்சிகள் பயமுறுத்தல்; எதிரிகள்மீது புகார்!

(பச்சிலைப்பள்ளி)

புலோப்பளை கொலைவழக்கு பளை சுற்று நீதிமன்ற நீதிபதி திரு. கே, வி. விக்கினேஸ்வரன்முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டசமயம், சாட்சிகளை எதிரிகள் பயமுறுத்துவதாகவும், தொந்தரவு செய்ய முயல்வதாகவும், பளைப் பொலிஸ்தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

நீதவான் எதிரிகளைப் பார்த்து "நீங்களோ அல்லது வேறு ஆட்களைக் கொண்டோ சாட்சிகளை இனிமேல் பயமுறுத்தினல் அலது தொந்தரவு செய்தால் உங்கள்பிணை ரத்து செய்யப்பட்டு வழக்கு முடியும்வரை விளக்க மறியலில் இருக்க நேரிடுமென எதிரிகளை எச்சரித்தார்,

இவ்வழக்கில் புலோப்பளையைச் சேர்ந்த பி. மரியாம்பிள்ளை, எவ். பெர்னண்டோ ஆகியோர் சா. குகபாலசர்மாவை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுளளது.

எதிரிகளால் தொந்தரவு ஏற்படும் பட்சத்தில் உடனடியாகப் பொலிசாருடன் தொடர்பு கொள்ளும்படி சாட்சிகளுக்கு நீதிபதி தெரிவித்தார். [க]

## தேவை

129, பிரதான வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள விஜிதா ட்றவல் சேவையினருக்கு நன்கு ஆங்கிலம் பேச, கடித மூலம் தொடர்புகொள்ளக் கூடிய, திறமைமிக்க பெண் ஆங்கில தட்டெழுத்தாளர் தேவை. (30-9-1980) செவ்வாய்கிழமை காலை 9மணிக்கும்10 மணிக்கும் இடையில் நேரில் சான்றிதழ்களுடன் சமூகம் தரவும். இது விடயமாக சிபார்சையோ, செல்வாக்கையோ பயன்படுத்துபவர்கள் வேலைவாய்ப்பினை இழப்பர். 6943

மக்கினென் டிறவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்.
MACKINNON TRAVEL SERVICE (Ceylon) LTD
தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.
இங்கு ஃ உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
ஃ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
சுற்றுலாக்கள் ஃ பாஸ்போர்ட்
இப்படி எல்லா வசதிகளையும் கொழும்புக்குச் செல்லாமலே ஒழுங்கு செய்து கொள்ளலாம்: உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.
மக்கினென் டிறவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்,
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92. தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் செப். 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No. Ga 8948/78 The Eelanaadu P. B. No. 49
Telegram Eelanaadu, Phone. 38

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org